
பாராளுமன்ற உறுப்பினர்
வன்னி மாவட்டம்
இல. 22, வெளிவட்ட வீதி
வவுனியா.



# புதிய கண்ணோட்டம்

வெளியீடு: 2 | 01 கார்த்திகை 1993 | விலை: ரூபா ஐந்து

**இந்தக் கல்வியாண்டிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கான மாணவர் அனுமதிகள் வெகுவாகக் குறைந்திருக்கிறது. சகல பீடங்களுக்குமாக உள்ள 1180 இடங்களில் 408 மாணவர்களை மாத்திரமே பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதித்திருக்கிறது.**



## ஏன் இந்த நிலைமை?

## கல்விக்குப் பேர்போன யாழ்ப்பாணத்தின் எதிர்காலம் என்னவாகப் போகிறது?

'முன்னொரு காலத்தில்....' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே பெருமை பேசிக்கொள்ள வேண்டிய நிலைமையை நோக்கி, யாழ்ப்பாண மாணவர்களின் கல்வித்தரம் மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகிறது.

கொழும்பு மாணவர்களோடு போட்டியாகப் பல்கலைக்கழக அனுமதிகளைப் பெற்றுவந்த யாழ்.மாணவர்கள், இன்று கல்வியிற் பின்தங்கிய மாவட்டங்களோடும் போட்டியிட முடியாத நிலைமைக்குப் படிப்படியாகத் தள்ளப்பட்டு வருகிறார்கள்.


கல்வியையே பெரும் மூலதனமாக எண்ணும் யாழ்ப்பாண மாணவர்களின் கல்வித்தரம் நாசமடைந்து வருவதற்கான சூழ்நிலைகளையே அரசாங்கமும் புலிகளும் தொடர்ச்சியாகத் திணித்து வருகிறார்கள்.

ஆபிரகாம் லிங்கனுக்குக்கூட வீட்டில் ஏழ்மை இருந்தாலும் தெருவில் விளக்கு இருந்தது. குப்பி லாம்புகளையே தெருக்களிலும் வைத்துச் சரித்திரகால நிலைமைக்குப் போயிருக்கும் குடாநாட்டில், மக்களைப் பழைய நூற்றாண்டுகளுக்குத் தள்ளுவதாகவே கல்விச் சூழ்நிலைகளும் ஆக்கப்பட்டு வருகிறது.

படிப்பதில் ஆர்வமும் ஊக்கமுமுடைய குடாநாட்டு மாணவர்களின் படிப்பைப் பாழாக்கி வைத்திருப்பதற்கு அரசாங்கத்தினதும் புலிகளினதும் முட்டாள்தன அணுகுமுறைகளே காரணமாகும்.

புலிகளைக் காரணங்காட்டி, வடக்கு கிழக்கை இன்னுமொரு நூற்றாண்டு காலத்துக்கு மீளக் கட்டியமைக்க முடியாதவாறு ஆக்கிவிட அரசு சகல வழிகளிலும் காரியமாற்றி வரும் அதேவேளை, புலிகளும் 'தனிநாடு கண்டபின் படிக்கலாம், எல்லாம் செய்யலாம்' என்று சொல்லிக்கொண்டு மக்களைத் தற்குறிகளாக்குவதையும், புத்திசாலிகளையும் ஏனைய வளங்களையும் அழித்து வருவதையும், தொடர்ச்சியான யுத்த மூச்சுத் திணறல்களுக்குள் மக்களைக் கட்டிவைத்திருக்கும் மூடத்தனத்தையுமே செய்துவருகிறார்கள்.

...கடைசிப் பக்கம் ☞



## "பயங்கரவாதம் பற்றிப் பேச இந்த அரசாங்கத்துக்கும் யோக்கியதை கிடையாது"

### பி.பி.சி. பேட்டியில் செயலாளர் நாயகம் தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரன்

**?** நடந்து முடிந்த இராணுவ நடவடிக்கை தொடர்பாக உங்கள் அரசியல் கட்சியின் நிலைப்பாடு என்ன?

**!** இன்று பதவியில் இருக்கும் ஜனாதிபதி அவர்கள், இலங்கையில் இருக்கக்கூடியது இனப்பிரச்சினையோ அரசியல் பிரச்சினையோ அல்ல, அது ஒரு இராணுவப் பிரச்சினை என மீண்டும் மீண்டும் கூறிவருவது எல்லோரும் அறிந்ததே. உண்மையில், பிச்சினையின் அடிப்படையை உணராதவரையில் இவர்களால் இங்கிருக்கக்கூடிய பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது.

ஏற்கனவே, கடந்த பத்து வருடங்களாக நடந்துவரும் இராணுவ நடவடிக்கைகள்மூலம் நாடு அடைந்த நஷ்டம், அனுபவித்த துன்பங்கள் யாவற்றையும் அவர்கள் மறந்துபோனது கவலைக்குரியது. நடந்து முடிந்த யுத்தங்களில் இருந்து இவர்கள் பாடம் படிக்காமல் இருப்பதும், தொடர்ந்து இந்த யுத்தத்தை நடத்திக் கொண்டிருப்பதும் நிச்சயமாக மேலும் மேலும் இழப்புக்களை உருவாக்குமே தவிர, தீர்வு காண முடியாது.

மொத்தத்தில் இந்தப் பிரச்சினையை வேறுபக்கம் திசைதிருப்பி, சிங்களமக்கள் மத்தியில், 'எமது இராணுவத்தினர் புலிகளை வெற்றி கண்டுவிட்டார்கள்' என்ற மாயையான கருத்துக்களை உருவாக்குவதற்கு இது முயலுமே தவிர, இந்த யுத்தத்தின்மூலம் இவர்களால் இங்கிருக்கக்கூடிய பிரச்சினைக்கு எந்தவொரு தீர்வையும் கண்டுவிடமுடியாது.

இராணுவத் தீர்வு என்பது எந்த விதத்திலும் சாத்தியமல்ல, அரசியல் தீர்வொன்றின் ஊடாக மாத்திரமே இந்த நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதை நாம் திரும்பத் திரும்ப ஆணித்தரமாக வலியுறுத்தி வந்துள்ளோம்.

இன்றும்கூட நாம் இந்த அரசாங்கத்துக்குச் சொல்வது: பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமாயின், அடிப்படையில் இதுவோர் அரசியல் பிரச்சினை; தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வொன்றை முன்வைப்பதன் மூலமாக மாத்திரமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். அதை விடுத்து, நூற்றுக்கணக்கான இராணுவத்தைப் பலி கொடுப்பதன் மூலமோ, நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களைப் பலி கொடுப்பதன் மூலமோ, நூற்றுக்கணக்கான புலிகள் சாவதன் மூலமோ இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதை நான் மீண்டும் அழுத்தமாகக் கூற விரும்புகின்றேன். இதுதான் எமது கட்சியின் நிலைப்பாடும் ஆகும்.

**?** இந்தத் தாக்குதலில் பெரும் உயிரிழப்புக்கள் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. விமானங்கள் குண்டுத் தாக்குதல்கள், தாழப் பறந்து தாக்குதல் என வடபுலத்தில் இராணுவம் கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது. தமிழ் அரசியல் கட்சிகள் இந்தத் தாக்குதல்கள் பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றன?

...5 ம் பக்கம் ☞



பெருந்தோட்டத்துறை மக்கள் இன்று பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

பெருநதோட்டத்துறை சார்ந்த தோட்ட நிர்வாகங்களைத் தனியார் கம்பெனிகள் பொறுப்பேற்றுள்ள கடந்த ஒரு வருட கால அனுபவங்கள் தோட்டத் தொழிலாளர்களைக் கிளர்ந்தெழச் செய்துள்ளது.

வழமையாகத் தோட்டத்துறையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு மலையக தொழிற்சங்க, அரசியல்வாதிகள் தீர்வு காண்பர் என்ற நம்பிக்கையில் மக்கள் இருந்தனர். ஆனால், இன்று அந்த நம்பிக்கையையும் மக்கள் இழந்துவிட்ட நிலையிலேயே காணப்படுகின்றனர்.

தோட்டத்துறையை தனியார் கம்பெனிகளிடம் கையளிக்கும் திட்டத்தை அரசு சார்பு தொழிற்சங்கங்களான இ.தொ.கா., இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகிய இரு தொழிற்சங்கங்களும் வரவேற்று ஆதரித்தன.

ஆனால், இன்று எழுந்துள்ள மோசமான நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண இவ்விரு சங்கங்களுமே தவறிவிட்டன.

உண்மையில் இவ்விரு தொழிற்சங்கங்களும் ஐ.தே.க.அரசாங்கத்தின் செல்வாக்குப் பெற்றவைகளாக உள்ளன.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர், நாட்டின் பிரதமர். இச்சங்கத்தின் உபதலைவர்களில் ஒருவர் தொழில், தொழிற்பயிற்சி அமைச்சர். மற்றவர் பாராளுமன்ற விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர். மற்றும் இரு உபதலைவர்களில் ஒருவர் சப்ரகமுவ மாகாண முதலமைச்சர். மற்றவர் ஊவா மாகாண முதலமைச்சர். இவர்களைத் தவிர, மேற்படி சங்கத்தின் பிரதிப் பொதுச் செயலாளர்கள் இருவர் மாகாண சபை உறுப்பினர்கள்.

இவைகளைப் பார்க்கும் பொழுது, ஐ.தே.க. அரசாங்கத்தையே தோட்டத் தொழிலாளர்களின் பிரதிநிதிகள்தான் கொண்டுநடத்துகின்றனர் என்ற பிரமை தோன்றும். ஆனால், நடைமுறையில் தொழிலாளர்கள் நன்மை பெற்றதாக இல்லை. இதே நிலைமைதான் இன்றைய நெருக்கடி நிலையிலும் வெளிப்படையாகத் தெரிகிறது.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் இரு கம்பெனிகளுக்கு எதிராக வேலைநிறுத்த அறிவித்தல் கொடுத்தது. பின் இறுதி நேரத்தில் விலக்கிக் கொண்டு, தொழிலாளர்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்ததாக அறிவித்தும் உள்ளது.

தோட்ட நிர்வாகங்களைத் தனியார் கம்பெனிகள் பொறுப்பேற்றபோதும், இவ்வாறான ஒரு அறிவிப்பையே மேற்படி சங்கம் விடுத்தது. அப்படியானால், ஒரு வருடத்திற்குப் பின்பும் பிரச்சினைகள் ஏன் எழுந்தன? ஏன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது? இன்றைய பேச்சுவார்த்தைகளின் முடிவுகள், அனைத்து தனியார் கம்பெனி நிர்வாகங்களினாலும் நடைமுறைப்படுத்த முடியுமா? போன்ற கேள்விகள் அனைத்துக்கும் மேற்படி சங்கம் தொழிலாளர்களுக்குப் பதில் கூற வேண்டிய நிலையில் உள்ளது.

உண்மையில் இச்சங்கம், பிரச்சினைகள் தீர்ந்ததாகக் கூறித் தொழிலாளர்களுக்கு மீண்டும் ஒருமுறை போக்குக் காட்டியுள்ளதென்பதே பொருந்தும்.

இ.தொ.கா.வும் அரசாங்கத்தில் செல்வாக்குடன் உள்ளது. பாராளுமன்றத்தில் ஐந்து இடங்களைக் கொண்டுள்ளது. மந்திரி பதவிகளையும் வகிக்கின்றது. மாகாண சபை, பிரதேச சபைகளிலும் ஆதிக்கம் செலுத்துகின்றது.

ஆனால், இன்றைய நெருக்கடி நிலைக்குத் தீர்வு காணும் வகையில் எந்தவிதமான திட்டத்தையும் முன்வைக்கவில்லை.

இ.தொ.கா.வின் பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்களைப் பொறுத்தவரை, தோட்டத்துறையில் பிரச்சினைகள் இல்லை; எல்லாம் ஒழுங்காக நடைபெறுகின்றன என்றே கூறிவருகின்றனர். இதனையே தமது மேல்மட்டத்திற்கும் எடுத்துக் கூறுகின்றனர்.

இவ்வாறு கூறியவர்களுக்கும், வேலைநிறுத்தம் ஒன்று நடத்தப்படுமானால் தொழிலாளர்கள் ஒத்துழைக்க மாட்டார்கள் என்று மார்தட்டிக் கூறியவர்களுக்கும் மஸ்கெலியாப் பகுதித் தொழிலாளர்கள் நல்ல பாடம் படிப்பித்துள்ளனர். இ.தொ.கா. அங்கத்தவர்களே வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு, 'பிரச்சினைகளே இல்லை' என்று கூறித் திரிபவர்களுக்கு பிரச்சினைகள் உண்டு என்பதை உணர்த்தியுள்ளனர்.

இ.தொ.கா. இன்றும் மாகாண சபைகளில் பெற்ற வெற்றிக் களிப்பிலேயே மிதக்கின்றது. உறுப்பினர்களும் தமக்குக் கடமை என்று ஒன்று இருப்பதாக நினைத்துச் செயற்படுபவர்களாகவும் இல்லை. அதேவேளையில், மக்களிடம் முகம் கொடுக்கும் நிலையிலும் இல்லை.

அமைச்சர் தொண்டமான் அவர்கள், எஞ்சியுள்ள 52 தோட்டங்களையும் தனியார் கம்பெனிகளிடம் கையளிக்க வேண்டாம் என்றும், தற்போது தோட்ட நிர்வாகங்களைப் பொறுப்பேற்றுள்ள தனியார் கம்பெனிகள் பெற்றுள்ள கால எல்லையை நீடிக்க வேண்டாம் என்றும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன், தோட்டத்துறைப் பிரச்சினை தொடர்பாக ஒவ்வொரு தோட்டத் தலைவர்களும் குறிப்பேட்டுப் புத்தகத்தில் எழுதி தோட்ட நிர்வாகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

இன்று தோட்டத்துறையில் நிலவுவது பொதுப்பிரச்சினை. அது கொள்கையளவில் தீர்மானிக்கப்பட வேண்டியது. தோட்டத் தலைவர்களினால் தீர்க்க முடியாத நிலையில்தான் பிரச்சினைகள் விஸ்வரூபம் எடுத்துள்ளன. எனவே, இன்றைய பிரச்சினைக்கான தீர்வு மேல்மட்டத்தில் பேசித் தீர்மானிக்கப்பட வேண்டியது என்பது உணரப்பட வேண்டும்.

மலையகத்தில் உள்ள எதிரணி தொழிற்சங்கங்கள் ஒரு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய ஒரு காலகட்டம் இது. ஆனால், வழமைபோல் வசைபாடிக் கொண்டும், இ.தொ.கா.வைச் சாடிக் கொண்டும் அவை தம் கடமையை முடித்துக் கொண்டுள்ளன. ஆக்கபூர்வமாக எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரை இத்தொழிற்சங்கங்கள் எடுக்கவும் தவறிவிட்டன.

ஒட்டுமொத்தத்தில் கூறுவதானால், தொழிற்சங்கங்களின் போக்கில் தொழிலாளர்கள் நம்பிக்கை இழந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

அண்மையில் இடம்பெற்ற வேலை நிறுத்தப் போராட்டங்கள்கூட தொழிலாளர்களின் நிர்ப்பந்தத்தின் பேரில் நடத்தப்பட்டவையாகவே உள்ளன. அந்தளவுக்கு இன்றைய பிரச்சினைகள் தொழிலாளர்களைத் தாக்கியுள்ளன.

இறுதியாகக் கூறுவதாயின், தோட்டத்துறையில் இன்று நிலவுகின்ற பிரச்சினை, அம்மக்களின் தொழில்ரீதியானது மட்டுமல்ல, அம்மக்களின் தலைவிதியுடனும் சம்பந்தப்பட்டது என்பதை மலையக அரசியல், தொழிற்சங்கத் தலைமைகள் உணரவேண்டும்.

– குறிஞ்சிஊரான்

தேசிய பிரச்சினையில் அரசின் இராணுவ அணுகுமுறையினை நாம் எப்போதும் எதிர்த்து வந்திருக்கிறோம். அதுவோர் பயங்கரவாதப் பிரச்சினை என்ற தனது புதிய கண்டுபிடிப்பினை ஜனாதிபதி மீண்டும் மீண்டும் கூறிவருவது கேலிக்குரியதாகும். அவர் ஜனாதிபதியாக ஆன காலத்தில் இருந்து சிங்களத் தீவிரவாதிகள் பக்கந்தான் அதிகமாகச் சாய்ந்து வருகின்றார். அவர்கள் அவரது கண்டுபிடிப்புக்காக அவரைப் பாராட்டுகின்றனர்.

– வாசுதேவ நாணயக்கார

இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்று ஒன்று இருக்கின்றது என்பதைஇந்நாட்டு மக்கள் மட்டுமல்ல, உலக மக்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கும் உண்மையாகும். ஆனால் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க, இங்கு இருப்பது பயங்கரவாதமே அன்றி இனப்பிரச்சினை அல்ல என்று கூறி, உலக மக்களையே வியப்பில் ஆழ்த்தியுள்ளார்... தமிழர் பிரச்சினை என்று ஒன்று இந்நாட்டில் இருப்பதன் காரணமாகவே பல்வேறு ஒப்பந்தங்கள் உருவாகின. ஜனநாயகத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் சிங்கள மக்கள்கூட இதற்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்று உணர்ந்துள்ள இவ்வேளையில், சகல அதிகாரமும் கொண்டுள்ள ஒரு ஜனாதிபதி ஒன்றும் புரியாதவர்போல் பேசுவதும் செயற்படுவதும் சற்றும் பொருத்தமானதல்ல.

– ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ்.நடேசன்

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை எனக் கூறுவதானால் நாம் முட்டாள்களின் சொர்க்கத்தில் வாழ்கின்றோம் என்பதே அர்த்தமாகும்.

– எம்.எச்.எம்.அஷ்ரப்

அதிகாரங்களைப் பன்முகப்படுத்தும் நிறுவனங்களாக அரசாங்கம் மாகாண சபைகளை உருவாக்கியது. ஆனால் ஜனாதிபதியோ இப்பொழுது மாகாண சபைகளுக்கு ஆட்சி நடத்தும் அதிகாரம் வழங்கப்படவில்லை என்கிறார். அப்படியானால், அதிகாரங்களைப் பன்முகப்படுத்தும் அரசியல் தீர்வுகள் பற்றி வடக்கு கிழக்கு மக்கள் நம்பிக்கை வைப்பார்களா? இதுபோன்ற பேச்சுக்களால் வடக்கு கிழக்கு மக்கள் அரசியல் தீர்வுக்கு வருவதை விட்டு, மென்மேலும் பயங்கரவாதிகள் பக்கத்துக்கே தள்ளப்பட்டு விடுவார்கள்.

– சிறிமா பண்டாரநாயகா

'இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமில்லை, அரசியல் தீர்வொன்றைக் காணுங்கள்.'

– தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில்.

## இரங்கல்



வடக்கு கிழக்கு மாகாண அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் வே.ந.சிவராசா அவர்கள் இந்தியாவுக்குத் திருத்தல யாத்திரை மேற்கொண்டிருந்த சமயத்தில் சுகவீனமுற்று, சென்னை மருத்துவமனையொன்றில் 27.09.93 அன்று காலமானார்.

துன்னாலை தெற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரது இறுதிக் கிரியைகள் சென்னையில் நடந்தது. 21 வயதிலேயே பட்டதாரியாக வெளியேறிய சிவராசாஅவர்கள், அரசமொழிகள் திணைக்களம், உள்ளூராட்சி அமைச்சு, நிதி அமைச்சு போன்றவற்றில் உயர் பதவிகளை வகித்தவர். ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் அதிதி விரிவுரையாளராகவும் பணிபுரிந்தஇவர், இந்து சமய திணைக்களம் முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்டபோது, அதன் முதலாவது பணிப்பாளராகவும் கடமையேற்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பல ஆண்டுகள் பதிவாளராகக் கடமை புரிந்தார். வடக்கு கிழக்கு மாகாண அரசு உருவானபோது, அதன் தலைமைச் செயலாளராகக் கடமையாற்ற முன்வந்தார். வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கும் மக்கள் முன்னேற்றத்திற்கும் வழி செய்யக்கிடைத்த சந்தர்ப்பத்தை முனைப்புடன் பயன்படுத்திக் கொள்வதில் உற்சாகமாய் உழைத்தார். அதிகாரப் பரவலாக்கம், நிதி ஒதுக்கீடு போன்ற விடயங்களில் மாகாண அரசைப் பலப்படுத்த மத்திய அரசுடன் தொடர்ச்சியாகப் போராடினார்.

மாகாண அரசு செயல்பட்ட குறுகியகாலத்தில், அதன் இயலளவுக்கு மேலான பல சாதனைகளை செய்துமுடிக்க சிவராசாஅவர்களும் பெருமளவில் காரணமாயிருந்தார். வடக்குகிழக்கு மாகாணஅரசு கலைக்கப்பட்டதோடு, அவர் தனது அரசுப் பணிகளிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார். அன்னாரதுகுடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் ஈழமக்கள்புரட்சிகரவிடுதலை முன்னணி தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

# எதிரிக்குச் சகுனம் பிழைக்க எங்கள் மூக்கை அறுக்கலாமோ?



## தோழரடிப்பொடி எழுதுகிறார்

நமது தமிழ்ப் புத்திஜீவிகள் சிலரைப் பற்றிப் பேச்சு வந்தால், "அவை மற்றாக்களைச் சுத்திச் சீவிக்கிற ஆக்களெல்லோ...." என்று இப்ப கனடாவில் இருக்கும் நண்பர் ஒருத்தர் சொல்லுவார். அவர் சொல்வதற்கேற்றபடியே குழப்பமான பல கருத்துக்களை வைத்துக் கொண்டு, தமிழ் மக்களின் உணர்வுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் காட்டிக்கொள்ளும் முயற்சியில் அரைவேக்காட்டுத்தனமான அபிப்பிராயங்களை உதிர்த்துக் கொண்டிருப்பவர்களும் இன்று மலிந்திருக்கின்றனர். புலிகளைவிட, தமிழ் பேசும் மக்களை மோசமான படுகுழிக்கு இட்டுச் செல்பவர்களாகவே இந்தச் 'சுத்திஜீவி'களும் காணப்படுகின்றனர்.

தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைக்கு நிறைவேறக்கூடிய தீர்வொன்றைப் பற்றி யோசிப்பதை விடுத்து, பேரினவாதத் திமிருக்குப் பதிலாக சிறுபான்மைத் திமிர்வாதமிட்டுக் கொண்டிருப்பவர்களையோ, நீண்டகால நோக்கில் எதையும் சிந்திக்காது அடுப்பு நெருப்பில் விழுந்தாலும் பரவாயில்லை உலையிலிருந்து தப்பினால் காணும் என்றளவில் வீரவசனம் பேசிக்கொண்டிருப்பவர்களையோ காண சலிப்புத்தான் ஏற்படுகிறது.

புலிகளின் கொந்துறாத்துக்காரர்களை விட்டுவிடுவோம். புலிகளின் பாதை, நடைமுறை அனைத்தும் பிழையானவை என்றும் அவர்களிடம் எந்தவொரு ஜனநாயகத் தன்மையும் கிடையாது என்றும் புத்திஜீவித்தன லேபிளுக்காக ஒப்புக்கொண்டுவிட்டு, மறைமுகமாக அவர்களைத் தாங்கிப் பிடித்து எழுதிவருபவர்கள் பற்றித்தான் நாம் பேச வேண்டியிருக்கிறது.

சிங்களப் பேரினவாதிகளின் திமிர்த்தனங்களுக்கு புலிகளின் வீராவேசப் போர் நல்ல பதிலடியாக இருக்கிறது என்று திருப்திப்பட்டுக் கொள்வதோடு இவர்கள் விஷயத்தை முடித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். அரபாத்தையும் ராபினையும்போல் பிரபாகரனும் விஜயதுங்கவும் பேசிப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று வலுசுளுவாக மோனாக்கும் மூனாக்கும் முடிச்சுப் போட்டு அற்புத ஆலோசனைகளையும் எடுத்துவிடுகிறார்கள்.

"கொழும்பில் சிங்களவரும் தமிழரும் ஒன்றாக வாழ்கிறார்கள்; பாஸ்கரலிங்கமும் சண்முகலிங்கமும் எனது செயலாளர்களாக இருக்கிறார்கள். எனவே இங்கு இனப்பிரச்சினை எதுவும் கிடையாது" என்று சொல்லிவருகிற இந்த நாட்டின் ஜனாதிபதியுடைய (சந்தேகத்துக்குரிய) பாமரத்தனம் போன்றதாகவே இவர்களுடைய அபிப்பிராயங்களும் காணப்படுகிறது.

சண்டையின் மூலம் சிறீலங்கா அரசோடு பேரம் பேசக்கூடிய நிலைமையைப் புலிகள் தக்கவைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், சிங்கள அரசைப் பேச்சுவார்த்தைக்கு நிர்ப்பந்திக்கக்கூடிய அடிதடி வல்லமையைப் புலிகள் கொண்டிருக்கிறார்கள் என்பதையுமே, அவர்களைத் தூக்கிப் பிடிப்பதற்கான சாட்டுக்களாக இவர்கள் சொல்லிவருகிறார்கள்.

இலங்கையில் சண்டை பிடித்துக் கொண்டிருக்கிற இரு தரப்பினரும் சமாதானமாகப் பேசிவிட்டால் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை தீர்ந்துவிடுமா என்பதையே இந்த அறிஞர்களிடமிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டும். இவர்கள் இதற்கு முன்னால் சமாதானமாகப் பேசிக்கொள்ளவில்லையா? ஒப்பந்தத்தை அமுல்படுத்த வந்த அமைதிப்படையைத் துரத்துவதற்காக வண்டி வண்டியாக ஆயுதங்களை வாங்கிக் கொள்ளுமளவுக்கு நண்பர்களாகிவிடவில்லையா? அப்போதே ஏன் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்ந்து போகவில்லை? இவ்வளவுக்கும் பாலஸ்தீன–இஸ்ரேல் உடன்பாடு நோர்வேயில் நடந்ததைப் போல இரகசியமாகத்தானே இவர்களும் பேசிக்கொண்டார்கள்!

இந்திய அமைதிப்படை தொடர்ந்தும் இங்கே நின்றிருந்தால், சிறீலங்கா பேரினவாதிகளின் இதுபோன்ற முட்டாள்தனமான பேச்சுக்களாலும் நடவடிக்கைகளாலும் ஈழம் பிரிவதற்கான ஒரு நிலைப்பாட்டுக்குத்தான் இந்தியாவும் வந்திருக்கும். இல்லையெனில், அமைதிப்படை போவதற்கு முன்னால் தமிழ் பேசும் மக்களும் சிங்களமக்களும் இந்த நாட்டில் சரிநிகர் சமானமாக வாழ்வதற்கான அதிகாரப் பரவலாக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். வெறும் தமிழ் வெறியுணர்ச்சியில் மாண்டு போயிருக்கிற புத்திஜீவிகளுக்கு இனி இதை எப்படிப் புரிய வைப்பது?

புலிகள் ஜனநாயக விரோதிகள், தமிழ் மக்களின் விடுதலைக்காகத் தாங்கள் மட்டுமே போராடத் தகுந்த அதிமனிதர்கள் என்று சொல்லிக்கொண்டு தங்கள் 'தாகத்'திற்காக மட்டுமே சண்டையிடுபவர்கள் என்று புலிகளைப் பற்றிச் சொல்லிவிட்டு, ஆனால் அவர்களோடு பேசித்தான் அரசாங்கம் தமிழ் மக்களுக்கான தீர்வைக் காணமுடியுமென்று உளறுவது (உளறுவாயன் மன்னிக்க) அசல் கேலிக்கூத்துத்தான்.

இவர்களது இந்தப் பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுகிற கதையையெல்லாம் போய் யாழ்ப்பாணத்திலிருந்துகொண்டு கதைக்க முடியாதென்பதும் இவர்களுக்குத் தெரியும்.

அங்கே ஜனநாயக முறைப்படி அங்கீகரிக்கப்படாத ஆட்சியாளர்களாகப் புலிகள் விளங்கும் இன்றைய நிலையில் கூட, யாரும் தங்கள் கருத்தை வெளியே பேசமுடியாது, சுதந்திரமாய் அபிப்பிராயம் வைத்திருக்க முடியாது, அமைப்புக்கள் இயங்க முடியாது, அவர்களை விமர்சிக்கக்கூட முடியாது. இது இவர்களுக்கும் தெரியும். இந்த நிலைமையிலேயே தொடர்ந்தும் தமிழ் மக்களின் கதி இருப்பதற்கு புலிகளுக்கு அங்கீகாரமளித்து விடலாமென்று இவர்கள் தங்கள் மூளையைச் சுழட்டிக் கருத்து வெளியிடுகிறார்கள்.

தமிழ்மக்கள் பிரச்சினை தொடர்பாக சிங்களப் பேரினவாதிகள் நடந்துகொள்ளும் திமிர்த்தனத்திற்குப் பதிலடியாகப் புலிப் பயங்கரவாதத்தை வளர்த்துவிட்டுத் திருப்தியடையப் பார்க்கிறார்கள். சண்டையை நிறுத்திப் புலிகளும் அரசும் சமாதானமாவதோடு தமிழ் மக்களின் பிரச்சினை தீர்ந்துவிடுமென்று கன்னப் பட்டைகள் கட்டின குதிரைகள் போலப் பார்க்கிறார்கள் இவர்கள்.

அரசாங்கத்தை விடுங்கள். புலிகளால், சண்டை புரிவதை நிறுத்தி ஜனநாயகபூர்வமான ஓர் ஆட்சியைத் தருவதற்கு முடியும் என்ற நம்பிக்கையை நாம் எங்கிருந்து பெறுவது? புலிகளுக்கும் ஜனநாயக நடைமுறைகளுக்கும் உள்ள சம்பந்தத்தை அரசியலறிவு இல்லாதவர்களும்கூடத் தெளிவாகச் சொல்லிவிடுவார்கள்.

புலிகளை ஜனநாயக விரோதப் போர் வெறியர்கள் என்றும், ஆயுதங்களால் கருத்துக்களை அடக்குபவர்கள் என்றும் அறிவுஜீவித்தனமாய் விமர்சித்துக் கொண்டே, அவர்களை எஜமானர்களாக அங்கீகரிக்கவும் தயாராக இருக்கும் இந்தப் போலிகளைச் சகிக்கத்தான் முடியவில்லை.

'எங்களுக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனப் பிழையானால் சரி' என்ற இவர்களது தமிழுணர்ச்சி ஆத்திரம், அரசாங்கத் திமிருக்கெதிராகப் புலிப் பராக்கிரமத்தைத் தூக்கிப் பிடிப்பதற்கு அப்பால் எதையும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

எனது கவலை இவர்களது மூக்குப் போவது பற்றி அல்ல. இவர்கள், எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்கள் எல்லோருடைய மூக்குகளும் அறுபடுவதற்கு துணை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றித்தான்.

> "இன்றைய நெருக்கடியில் இருந்து விடுபட வேண்டுமாயின் புதிய சிந்தனையின் அடிப்படையில் விவகாரங்களை அரசாங்கம் கையாள வேண்டும். யாழ் குடாநாட்டு மக்களும் இலங்கையர்களே என்ற சிந்தனையுடன் செயற்பட வேண்டும். இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும்.
>
> – சு.க. எம்.பி. அநுருத்த ரத்வத்தை
>
> வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் தமிழர்களின் தாயகம் என்ற கோட்பாடு காரணமாகவே இன்றைய போர் நீடித்துக் கொண்டிருக்கிறது. சில தமிழ்க் கட்சிகளும் அமைச்சர் தொண்டமானும் இத்தாயகக் கோட்பாட்டை ஏன் ஆதரிக்கிறார்கள் என்று புரியவில்லை.
>
> – அமைச்சர் சந்திரா ரணதுங்க"

....நம் நாட்டில் வாழமுடிகிற மக்களில் புத்திசாலிகள் என்று சொல்லத் தக்கவர்களை இரண்டு வகைகளுக்குள் அடக்கலாம். ஒருசாரார் நடக்கும் யுத்தவெறிக் கொடூரங்களுக்கும், நமது காப்பாளர்கள் என்று சொல்லிக் கொண்டே வளர்ந்துவிட்டவர்களின் காட்டுமிராண்டித்தனங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவித்துப் பின்னர் சிதைவுக்குள்ளாகிப் போனவர்கள்; மற்றப் பிரிவினரோ சமரசம் செய்துகொண்டு பிணமாக உயிர் வாழ்பவர்கள்.

வலிந்து சுமத்தப்படும் அழிவுகளினால் வேதனையும் துயருமாக நலிவுற்றுக் கிடக்கிறது நம் தேசம். மூடர்களாலும் தன்னலக்காரர்களாலும் அடக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள் மக்கள். விரக்தியுற்றிருக்கும் மக்களின் எதிர்ப்புணர்வை தூண்டி வளர்த்து அவர்களை வழிநடத்திச் செல்ல, அவர்களின் சார்பாக எந்தவொரு சக்தியோ அமைப்போ மக்கள் மத்தியில் இருந்து இயங்க முடியாத நிலை.

இந்த நிலையைக் கண்டு கொதித்தெழுந்து, அதன் காரணமாக அடக்குமுறைகளை கொலை மிரட்டல்களைச் சந்தித்துப் பின் தோல்வி உணர்வுக்கு ஆளாகி அவலப் பார்வையை உருவாக்கிக் கொண்ட அறிவுஜீவிகளின் கையாலாகாத்தனம், அவர்கள் அதிகார வெறிச் சக்திகளுடன் செய்து கொண்ட சமரசங்கள்....

இவர்களில் சிலர் நோய்வாய்ப்பட்ட மனசாட்சியால் அவதியுற்றவர்கள், பெரும்பாலும் அப்பட்டமான சந்தர்ப்பவாதிகள்.

இவர்கள் இன்று பின்வரும் இரண்டு நிலைப்பாடுகளைக் கொண்டவர்களாக இருக்கின்றனர்: "இந்த யுத்தவெறிச் சக்திகளின் அநியாயப் போக்கினையும் பாசிச நடவடிக்கைகளையும் என்னால் கண்டுகொள்ள முடிகிறது. ஆனால் அதை எதிர்த்து என்னால் போராட முடியாது; மௌனமாக ஏங்கிக் காத்திருப்பதைத் தவிர வேறு வழி எனக்கில்லை" என்பது ஒன்று.

"என்னால் இந்தக் கொடுமைகளைக் கண்டுகொள்ள முடிகிறது. ஆனால் இதைத் தமிழ் மக்களைப் பாதுகாக்கும் புனிதப் போராட்டமாகப் பார்ப்பதற்கே விரும்புகின்றேன். இதைப் புனிதமான விடுதலைப் போராட்டமாகப் பார்ப்பதால், இந்தப் பாசிசக் கொடூரங்களுக்கு எதிராகப் போராட முடியாத என் கையாலாகாத்தனத்தை மறைத்துக் கொள்ளலாம். அதேசமயத்தில், நான் மக்களின் விடுதலைக்கான குரல் கொடுப்பாளன் என்ற இமேஜையும், தேசிய இனச் சிக்கலின் தீர்வுக்காகப் பங்காற்றிக் கொண்டிருக்கிற செயலாளன் என்ற கௌரவப் போர்வையையும் காப்பாற்றிக் கொள்ள வழியேற்படுகிறது" என்று சிந்திப்பது மற்றொன்று.....

*– ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாட்டில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றிலிருந்து....*

கார்த்திகை 19

# தோழர் நாபா

## 42 வது பிறந்தநாள் நினைவு

தலைமைத்துவம் என்பது இராணுவ வீர சாகசங்களைக் கொண்டும் கொலை செய்யப்பட்ட உடல்களின் எண்ணிக்கையைக் கொண்டும் கணிப்பிடப் படுவதல்ல. மாறாக, ஏற்றுக்கொண்ட கொள்கைக்காக உறுதியுடன் போராடு தல், மக்களின் நலன்களின் அடிப்படையிலிருந்து முடிவுகளை எடுத்தல், இவை எல்லாவற்றுக்கும் மேலாக மனித நேயமும் மனிதப் பண்பும், இவை தான் தலைமைத்துவத்தை உருவாக்கும். இவ்வகையில் ஈழவிடுதலைப் போராட்ட வரலாற்றில் தோழர் நாபாவைத் தவிர்ந்த ஒரு தலைவரை என்னால் பார்க்க முடியவில்லை.

— தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரன்

திரு.பத்மநாபா அவர்களும் எனது தாயாரும் ஒரே பிறந்த நாளைக் கொண்டவர்கள். இருவரும் மிக உயர்ந்த நோக்கத்திற்காக தம் உயிரைத் தியாகம் செய்தவர்கள். பத்மநாபா அவர்கள் கொடூரமான முறையில் படு கொலை செய்யப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்புதான் டெல்லியில் அவரைச் சந்தித்தேன். தனது மக்களுக்கு இன்னும் எவ்வளவோ பணியாற்ற வேண்டிய மிக இளமையும், மிகுந்த சிந்தனைத் திறனும், துடிப்புடன் செயற்பட்டவருமான இத்தலைவர் இன்று நம்மிடையே இல்லை என்பதை நம்பவே முடியவில்லை.

— திரு.ராஜீவ்காந்தி

சக்தி வாய்ந்த ஒரு தலைமைத் தோழரை இழந்துவிட்டோம். எங்களது இந்த இழப்பு பிரம்மாண்டமானது; சோகம் தாங்கிக் கொள்ள முடியாதது. ஆனால் இதற்காக ஒப்பாரி வைத்து அழுது கொண்டிருப்பதல்ல அவருக்கு நாம் செலுத்தும் அஞ்சலி. அவரால் வளர்க்கப்பட்ட நாங்கள், எங்களது எதிர்காலக் கடமைகள் குறித்து தெளிவாக உள்ளோம். கடக்க வேண்டிய தூரம் இன்னும் நீண்டதாகவே உள்ளது.

எதிலும் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளாது செயல் நிறை வேற்றங்களையே எதிர்பார்ப்பார் தோழர் பத்மநாபா. கட்டுக்கடங்காத பாசத்தைப் பொழிவார். ஒவ்வொருவர் நலனிலும் அக்கறை செலுத்துவார். எல்லாவற்றிலும் மனிதநேயம் என்பதையே முதன்மைப்படுத்தினார். ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் சார்பிலிருந்தே ஒவ்வொன்றையும் சிந்தித்தார். அடக்கமாய் ஒரு மாணவன் போன்று எல்லோர் சொல்வதையும் கேட்டுக் கொள்வார். ஓரிரண்டு வார்த்தைகளில் தனது கருத்தைத் தெளிவுபடுத்தி விடுவார். கூர்மையான விழிகளால் நேர்நோக்கி குழந்தையாய்ச் சிரிப்பார். பிழை செய்பவர்களை ஆயுளுக்கும் நாணப்பட வைக்கும் அவரது கேலியும் சிரிப்பும். அரவணைத்தே திருத்துவார். பழகும் பண்பினால் அனைவரையும் வென்றுவிடுவார். எதிரிகளையும் வெல்ல வேண்டுமே தவிர அழிப்பது நம் நோக்கமில்லை என்பார். ஓ! கம்பீரமான மனிதர் எங்கள் தோழர்.

அவரது பொதுவாழ்க்கைச் சேவைகள் மிகத் துணிச் சலானவை. அவர் தீரர். மிகச் சிறந்த மக்கள் பக்தர். தனது வாழ்க்கையால் நமக்குப் பாடம் சொன்னவர். மக்களால் நேசிக்கப்பட்ட ஒரு உன்னத மனிதர் கொல்லப்பட்டுவிட்டது எமது கட்சிக்கும் தேசத்திற்கும் ஈடு செய்யமுடியாத இழப்புத்தான். எங்கு தேடினாலும் கண்டுபிடிக்க முடியாத அந்த மனிதாபிமானம் மிக்க தலைவரின் குறுஞ்சிரிப்பு பூத்திருக்கும் முகத்தைக் குண்டுகள் துளைத்திருக்கக் காட்டிய அந்த மாலைக் கருக்கலை மன்னிக்கவே முடியாது.

அவரது பெருமை நீடித்து நிலவட்டும். அவர் பெயரும் லட்சியமும் புனிதப்பட்டட்டும். அவரால் விடப் பட்ட கடமைகள் நிறைவேற்றப்படட்டும் அவரை நாம் நன்றியுடனும் அன்பு டனும் தோழமையுடனும் எப்போதும் நினைக்கிறோம். அவரால் பெற்ற பலத் தோடு மனவளர்ச்சியை ஸ்தாபித்து நாம் எம்முள் வளர்ப் போம். தோழர் எஸ்.ஜி.யின் உடம் போடு அவரது சிறப்புகள், அவர் கொண்டிருந்த இலட்சியம் எல் லாம் போய்விட வில்லை என்ப தைக் கொலை காரர்களும் தெரி ந்து கொள்வர்.

*— ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியிட்ட தோழர் பத்மநாபா நினைவு மலரிலிருந்து...*



ஆற்றல்மிகு தோழர்களே!

ஈழப்போராட்டமானது வேறொரு வடிவத்தில் பரிணாம வளர்ச்சியடைந்திருக்கும் இக்கால கட்டத்தில், மக்கள் விரும்பும் அமைதி, ஜனநாயகம், புதிய வாழ்வு என்பவற் றுக்காக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தொடர்ந்து உழைத்து வருவது அனைவரும் அறிந்த விடயமாகும். இச்சந்தர்ப்பத்தில் அமைதி, ஜனநாயகம், ஒற்றுமைக்கு எதிரிகளாகவும் தமிழ்பேசும் மக்களின் நலன்களை விரும்பாத சக்திகளாகவும் – தடை போடுகிற வர்களாகவும் – உள்ள அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் எமது மக்களையும் தேசத்தையும் பாதுகாக்க வேண்டிய கடமையே நமக்கு முன்னால் மலை போலுள்ளது.

மாகாண சபையானது எமது மக்களின் அபிலாசை களைப் பூர்த்தி செய்யும் இறுதித் தீர்வல்ல. சிறீலங்கா அரசானது இந்தியாவுடன் செய்துகொண்ட ஒப்பந் தத்தின்படியான மாகாண சபைகளுக்கென்று ஒப்புக் கொண்ட அதிகாரங்களைக்கூட வழங்க முடியாம லிருக்கின்றது என்பதை நாம் நிரூபித்துக்கொண்டே தமிழ்பேசும்மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதான இலக்கை எட்டுவதும், தொடர்ந்து இந்த நாட்டில் ஒடுக்குமுறைகள் எதுவுமற்ற சமுதாய நிர்மா ணமுமே எமது நீண்டகாலக் குறிக்கோளாகும்.

இச்சந்தர்ப்பத்தில் நாம் நமது நட்புச் சக்திகளையும் எதிரிச் சக்திகளையும் இனங்கண்டு கொள்ள வேண் டும். தமிழ்பேசும் மக்களுக்குப் பாதகமான கொள்கை களைக் கொண்டிராத, எமது மக்களின் உரிமை களை மதிக்கும் அனைத்துச் சக்திகளுமே நமது நட்புக் குரியவர்களாவர்....

**அன்பான தோழர்களே!**

**தேசத் துரோக – ஜனநாயக விரோதிகளுக்கு எதிரான எமது உறுதிமிக்க நடவடிக் கைகளானது, அவர்கள் மக்களால் புறக்கணிக்கப் படுவதுடன் முடிவடைந்து விடும். ஆனால் நிரந்தர சமாதானம், மக்கள் அனைவருக்குமான பரிபூரண ஜனநாயகம், சுரண்டலற்ற சமு தாயம் என்ற எமது இறுதிக் குறிக்கோளுக் கான பயணத்தில் நேச சக்திகளாய் எம் முடன் இணைந்து வர இருப்பவர் களை அடையாளம் கண்டு செயற்படா விட்டால் நாம் தவறு செய்த வர்களாவோம்....**

**தோழர்கள் அனைவரும் நாம் எந்த இலக்கு நோக்கிப் போகிறோம் என்ற சரியான பிரக்ஞையுடன் இன்றைய காலடிகளை உறுதியாக எடுத்து வைத்தலே முக்கியமானதாகும்.**

*— 01.10.1989 ல் தோழர்களுக்கான சுற்றறிக்கையில் தோழர் பத்மநாபா.*


# இலங்கையில் ஜனநாயகம் மேம்பட்டு வருகிறதாம்!

**ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடலில் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுபட்டுக் கருத்துரைக்கிறார்கள்.**

ஐரோப்பிய பாராளுமன்ற அங்கத்தவர்கள் பன்னிரண்டு பேர் இலங்கையில் மனித உரிமைகள், பொருளாதார நிலைமைகள், வடகிழக்கு பிரச்சினை போன்றவற்றை ஆராய கொழும்பு வந்திருந்தார்கள். இவர்கள் பல அரசு சாராத தொண்டர் நிறுவனங்களையும், அரசியல் கட்சிகள், அரசாங்க உறுப்பினர்கள், ஜனாதிபதி போன்றவர்களையும் சந்தித்துப் பேசினார்கள்.

சகல கட்சிகளையும் சார்ந்த பாராளுமன்ற அங்கத்தவர்களுடனும் கலந்துரையாடல் ஒன்றை நடத்த வேண்டுமென்பதன் அடிப்படையில், பாராளுமன்றத்திலும் ஒரு கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டது. அமைச்சர் சொக்ஸி அவர்கள் தலைமை தாங்கிய இக்கலந்துரையாடலில் ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்கள் அங்கத்தவர்கள் உட்பட சிறீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பாகவும் தமிழ் மக்கள் பிரதிநிதியாகவும் தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களும் கலந்து கொண்டார்.

மூன்றரை மணி நேரத்துக்கு மேலாக நடைபெற்ற கலந்துரையாடலானது, சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களையும், அவர்களது மனோநிலையையும் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வெட்டவெளிச்சமாகக் காட்ட உதவியது. நம் மதிப்புக்குரிய பெரும்பான்மையினப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய



தேசியக் கட்சியினராயிருந்தாலும் சரி, சிறீலங்கா சுதந்திரக் கட்சியினராயிருந் தாலும் சரி தமிழ்ப் பிரச்சினை என்று வந்துவிட்டால் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான் என்று காட்டிக்கொண்டுவிடுவார்கள். அதிலும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் ஹெல உரிமையக்காரர்களென்றால் சொல்லத் தேவையில்லை. இந்த நாடு இரண்டாகப் பிரிவதைத் தவிர வேறு வழியில்லை என்பதுபோலத்தான் அவர்கள் நடந்துகொள்வார்கள்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின், தமிழ் மக்களின் உரிமைகளுக்கெதிரான கருத்துக்கள் யாவற்றிற்கும் யாழ் மாவட்ட எம்.பி.யும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமுமான தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உடனுக்குடன் பதிலளித்தார்.

முக்கியமாக, ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையில் ஜனநாயகம், இணைப்பாட்சி, இனப்பிரச்சினை தீர வெளிநாட்டு உதவிகள் தேவையா என்பதை மையப்படுத்தியே கேள்விகள் கேட்டார்கள்.

ஆளும் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி பிரதிநிதிகளைப் பொறுத்தவரை புலிகள் மாத்திரம்தான் இந்நாட்டில் பிரச்சினை என்றும், அவர்கள் அழித்தொழிக்கப்பட்டால் இங்கு சமாதானம் வந்துவிடும் என்ற அவர்களது பேரினவாத முட்டாள் தனத்தை வெளிப்படுத்தினார்கள். இணைப்பாட்சி என்பது எமது நாட்டுக்கு ஒத்துவராது, எமது நாட்டின் பிரச்சினை தனித்துவமானது, மற்ற நாடுகளில் உள்ள இணைப்பாட்சி முறை இங்கு சரிவராது என்றார்கள். இலங்கையில் ஜனநாயகம் மேம்பட்டு வருகின்றது என்றும், அதற்கு அத்தாட்சியாக தேர்தல்கள் நடக்கின்றன, நீதித்துறை செயற்படுகின்றது என்றும் சுட்டிக் காட்டினார்கள்.

அக்கலந்துரையாடலில் பங்குபற்றிய ஒரே தமிழ்ப் பிரதிநிதியான தோழர் பிரேமச்சந்திரன் இந்த முழுப்பூசணிக்காய் விவகாரங்களை அம்பலப்படுத்தியதுடன், சிங்களப் பா.உ.க்களின் இந்தத் தவறான நிலைப்பாட்டினால் ஒரு பிரச்சினை சரியாகப் புரிந்து கொள்ளப்படாமல் அல்லது வேண்டுமென்றே திரிபுபடுத்தப்பட்டு மேலும் மேலும் சிக்கலாக்கப்பட்டு வருகிறது என்பதை ஒவ்வொன்றாக விளக்கினார்.

இலங்கையில் ஜனநாயகம் என்பது ஒரு பெரிய கேலிக்கூத்து என்றார் அவர். அரசாங்கம் தேர்தல்களை நடத்துகின்றது. ஆனால், தேர்தல்கள் மிகவும் மோசடியான முறையிலேயே நடைபெற்று வருகின்றது. அதுமாத்திரமல்ல, சகல மின்னியக்க தொடர்பு சாதனங்களும் அரசின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. பத்திரிகைகளும் நடுநிலையற்றவை.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இந்த நாடு அவசரகாலச் சட்டத்தின் கீழேயே ஆட்சி செய்யப்பட்டு வருகின்றது. இப்படியான நிலைமையில் எமது நாட்டில் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவது சிரிப்புக்குரியது.

·இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இலங்கை சுதந்திரமடைந்ததில் இருந்து இன்றுவரை இங்கிருக்கக்கூடிய சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றது. ஒரு இனம் தொடர்ச்சியாக இன்னொரு இனத்தை அடக்கியாளும் இடத்தில் ஜனநாயகம் எவ்வாறு இருக்கமுடியும் என்று பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பினார்.

குறைந்தபட்சம் வடக்கு கிழக்கு இணைப்பு, இணைப்பாட்சி போன்ற வற்றை உள்ளடக்கிய ஓர் அரசியல் தீர்வொன்றின் ஊடாகவே இலங்கையில் இனப்பிரச்சினையைத்தீர்க்க முடியும். ஏற்கனவே, 13வது திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரங்களை அரசு பறித்தெடுத்தல், புலிகளின் ஒத்துழைப்புடன் மாகாண அரசைக் கலைத்து, ஓர் அரசியல் வெற்றிட நிலைமையை அரசாங்கம் தோற்றுவித்துள்ளமை என்பன பற்றி ஐரோப்பிய பிரதிநிதிகளுக்கு பிரேமச்சந்திரன் விளக்கமாக எடுத்துரைத்தார்.



இன்று இருக்கக்கூடிய சிங்களத் தலைவர்கள் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பக்குவமோ வலுவோ அற்றிருப்பதுடன், இனப்பிரச்சினை என்பது தேர்தலுக்கு வாக்கு வாங்க மாத்திரமே இவர்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றது.

ஆயுதப் போராட்டம் தொடங்கிப் பத்து வருடங்களுக்கு மேலாகியும்கூட இவர்களால் இனப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாமலிருப்பதைச் சுட்டிக்காட்டி, வெளிநாட்டு ஒத்துழைப்பின்றி இப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாது என்பது விளக்கப்பட்டது.

புலிகள்மீதும், அரசுமீதும் ஏககாலத்தில் சர்வதேச நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்படுவதுடன், அதற்கு முன்னால் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றும் முன்வைக்கப்பட வேண்டும் என்பதையும் தோழர் பிரேமச்சந்திரன் வலியுறுத்திக் கூறினார்.

40க்கு மேற்பட்ட சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மத்தியில், தமிழ் மக்களின் கருத்துக்களை ஆணித்தரமாக முன்வைத்துப் பேசிய தோழர் பிரேமச்சந்திரன், ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்னால், இவர்களின் மண்டையில் நிறைந்திருக்கும் பேரினவாதக் குறுகல் எண்ணங்களை அம்பலப்படுத்தினார்.

---

.முன்பக்கத் தொடர்ச்சி...

## பயங்கரவாதம் பற்றிப்பேச...

**!** முழு அரசியல் கட்சிகள் சார்பாகவும் கருத்துக்களை என்னால் கூற முடியாது. எம்மைப் பொறுத்தவரையில், ஆரம்பத்திலிருந்து இன்றுவரை இப்படியான தாக்குதல்களை முற்றுமுழுதாக எதிர்த்து வருவது மாத்திரமல்ல, இவை தமிழ் மக்களை மிகவும் மோசமாகப் பாதிக்கக்கூடிய அரச பயங்கரவாதச் செயல்கள் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துவந்துள்ளோம்.

வெறுமனே புலிகள்மீது மாத்திரமல்லாமல், குடாநாட்டில் இருக்கும் பல கோயில்கள் மீதும் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. செல்வச்சந்நிதி முருகன் கோயில், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயில், கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயில், இன்னும் பல்வேறு கோயில்கள்மீது, திருவிழாக்கள் நடக்கும் போது குண்டுத் தாக்குதல்களை நடத்தியதில், திருவிழாவில் கலந்துகொண்ட பக்தர்கள்கூட கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

ஆகவே, விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் என்பது உண்மையில் பரவலாக மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் பாதிக்கப்படுவது புலிகள் மாத்திரமல்ல, முற்றுமுழுதாக மக்களே மோசமாகப் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதையும் இந்தத் தாக்குதல்களைச் செய்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒருபக்கத்தில் புலிகளை பயங்கரவாதிகள் என்று கூறுபவர்கள், மறுபக்கத்தில் அதைவிட மோசமான பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுவதுதான் விசித்திரமானது. பயங்கரவாதிகள்பயங்கரவாதத்தனமாகத்தான் நடப்பார்கள். ஆனால், அரசாங்கம் என்ன செய்கின்றது? புலிகளையும் மிஞ்சும் மோசமான பயங்கரவாதிகளாக நடப்பதைத் தான் எம்மால் காணமுடிகிறது.

யாழ்.குடாநாட்டில் இருக்கக் கூடிய மக்கள், தொடர்பு சாதனங்கள் எதுவுமற்று, வெளி உலகத்துடன் எந்தவித தொடர்புமற்றிருக்கிறார்கள். கிளாலிப் பாதையும்கூட இன்று மூடப்பட்டுள்ளது. அவர்களுக்கு குடாநாட்டைவிட்டு வெளியே வர முடியாது; வெளியில் உள்ள தமது உற்றார் சுற்றத்தாருடன் பேசமுடியாது. இவ்வாறான திறந்தவெளிச் சிறைச்சாலை போன்ற சூழலிலேயே யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய பத்து லட்சம் மக்களும் உள்ளார்கள்.

எனவே, பயங்கரவாதத்தைப் பற்றிப் பேசுவதற்கு இந்த அரசாங்கத்துக்கு எந்த யோக்கியதையும் கிடையாதுஎன்றுதான் நான் கருதுகிறேன்.

**?** தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றுவரும்வேளையில் அரசு கடுமையான தாக்குதல் நடத்துவதற்கு என்ன காரணம்?

**!** முக்கியமாக, ஆரம்பத்தில் புலிகள் நடாத்திய ஒருசில தாக்குதல்கள். வெலிஓயா இராணுவ முகாம் தகர்க்கப்பட்டமையும், பருத்தித்துறை கடலில் இஸ்ரேல் படகு ஒன்று தகர்க்கப்பட்டமையும் சிங்கள இராணுவம் பலத்தை இழந்து வருகிறது என்று பரவலாக உருவான கருத்தினால் அரசுக்கு ஓர் சிக்கல் ஏற்பட்டது. அதை மறைத்து, சிங்கள இராணுவம் பலமாக இருக்கிறது, அதைப் பயன்படுத்த முடியும் என்பதைச் சிங்கள மக்களுக்கு உணர்த்துவதற்காகவும், படையினருக்கு இழப்பை ஏற்படுத்திய கடல்புலிகளின் கொட்டத்தை அடக்குவது என்ற ஒரு போர்வையில்தான் இந்த 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக நான் கருதுகின்றேன்.

ஆனால் உண்மையில், இந்த யுத்தத்தின் ஊடாக பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை சிங்கள மக்கள் நன்றாகவே உணர்ந்துள்ளார்கள். சிங்கள மக்கள் விரும்புவதுகூட ஓர் அரசியல் தீர்வைத்தான்.


ஆனால், இராணுவம் கிளாலியைப் பிடித்துவிட்டது என்ற ஒரு படத்தைக் காட்டுவதன் மூலம், சிங்கள மக்கள் மத்தியில் வாக்குகளைப் பெறுவதற்கான பிரபல்யத்தை அடைந்து விடலாம் என்றே சிறீலங்கா அரசாங்கம் நம்புவதாக நான் கருதுகின்றேன்.

> “தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வொன்றை முன்வைப்பதன் மூலமாக மாத்திரமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். அதை விடுத்து, நூற்றுக்கணக்கான இராணுவத்தைப் பலி கொடுப்பதன் மூலமோ, நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களைப் பலி கொடுப்பதன் மூலமோ, நூற்றுக் கணக்கான புலிகள் சாவதன் மூலமோ இந்தப் பிரச்சினைக் குத் தீர்வு காண முடியாது”

இது உண்மையில் அநாவசியமான யுத்தம். இந்த யுத்தத்தின் மூலம் இவர்கள்எதையும் சாதிக்கப்போவது இல்லை. ஆக, சிங்கள மக்களுக்கு அல்லது வெளி உலகத்துக்கு, ‘எமது இராணுவம் என்றும் பலமாக உள்ளது, எம்மால் நீண்ட தூரம் முன்னேற முடியும்’ என்பது போன்ற மாயையைத்தான் இவர்களால் உருவாக்க முடியுமே தவிர, வேறு எதையும் செய்யமுடியாது.

அப்படி ஒரு தோற்றத்தைக் காட்டி, சிங்கள மக்கள் மத்தியில் மீண்டும் வாக்குப் பலத்தை உருவாக்குவதற்குத் தான் இந்த அரசாங்கம் இப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபடுகின்றதே தவிர, உண்மையில் இதனூடாக எதனையும் சாதிக்கப்போவது கிடையாது.

# “தமிழ் மக்களைப் பிரித்து அடக்கிவிட முயலும் தந்திரங்கள் நாட்டைப் பிரிப்பதிலேயே போய்முடியும்”



**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியல் பீட உறுப்பினர் தோழர் இ. துரைரத்தினம்**

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் பேசும் மக்களைப் பிரித்து விட்டால், தொடர்ந்தும் அந்த மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக அடக்கி விடலாம் என்றே ஆட்சியாளர்கள் கருதி வருகின்றனர். இதற்காகவே தங்கள் மூளையைத் துருவி புதிது புதிதாக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

தமிழ் பேசும் மக்களுக்கென்று ஒட்டுமொத்தமாக எந்தப் பிரச்சினையும் இல்லையெனவும், அவர்கள் வாழிடமாக ஒரு பாரம்பரிய பிரதேசமோ, கலாச்சார தனித்துவங்களோ கிடையாதெனவும் நிறுவி, அடக்குமுறைகளை மேற்கொள்ளவே தொடர்ந்து பிரயத்தனமெடுத்து வருகின்றனர்.

அடக்குமுறை நடவடிக்கைகள், ஆசைவார்த்தைகள், அதிகாரத் தந்திரங்கள் என எல்லாவகைத் தகிடுதத்தங்களையும் செய்து வடக்கு கிழக்கைத் துண்டாடி, அந்த மக்களின் உரிமைகளை நசுக்கிவிடவே இவர்கள் கனவு காண்கிறார்கள்.

40 வீதமான தமிழ் மக்கள் தம்முடனிருப்பதாகவும், மீதித் தமிழ் மக்களுக்கு மட்டும்தான் பிரச்சினை இருப்பதாகவும், அதுவும் இனப்பிச்சினை அல்ல பயங்கரவாதப் பிரச்சினை என்று ஜனாதிபதி அவர்கள் பேசிவருகிறார். இராணுவ-புலிகள் மோதல் நடந்துகொண்டிருக்கும் இன்றைய நிலையில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி வடக்கு கிழக்கைப் பிரித்துவிடுவதன் மூலம், சிங்களப் பேரினவாதிகளைத் திருப்திப்படுத்தி அரசைக் காப்பாற்றிக் கொள்ளலாமென அவரும் எண்ணுகிறார்.

இந்த நாட்டின் ஜனாதிபதியுடைய சிந்தனை இப்படிப் போகிறதென்றால், பிரதமரவர்கள் பட்டவர்த்தனமாகவே விஷயத்தைப் போட்டுடைக்கிறார். அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் கிழக்கு மாகாணத்தில் தேர்தல்களை நடத்துவதன் மூலம் இந்தப் பிரச்சினையை வடக்கிற்கு மட்டும் தனிமைப்படுத்தி விடலாம் என்று, வெளிநாட்டினருக்கு இந்த நாட்டுப் பிரச்சினை குறித்து விளக்கமளிக்கிறார் அவர்.

இங்குள்ள தமிழ் பேசும் மக்களுக்குப் பிரச்சினை ஒன்று இருப்பதைத் தெரிந்துகொள்ள விரும்பாத, அந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட விரும்பாத இந்த நாட்டின் தலைவர்கள், இவ்வளவு நடந்ததற்குப் பிறகும் தமிழ் மக்களைப் பிரித்துவிட்டால் என்றும், அதன்மூலம் எளிதாக அடக்கிவிடலாமென்றும் கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள். இந்தத் தீவில் வசிக்கும் சிறுபான்மையின மக்களும் இந்த நாட்டின் குடிமக்கள் என்று கருதி, எரியும் பிரச்சினைக்குத் தீர்வொன்றை உருவாக்குவதற்கு இவர்கள் யாரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில், பிரதேச வேறுபாட்டையும், குரோதத்தையும் வளர்த்துவிடுவதற்கான அநாமதேய துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தமிழ் மக்களைப் பிரித்து லாபம் காண எண்ணும் சிங்களப் பேரினவாத சக்திகளின் திரைமறைவு முயற்சிகளின் ஒரு பகுதியாகவே இத்தகைய பிரச்சாரங்களும் முடுக்கி விடப்படுகின்றன.

இப்படியே இவர்கள் சிறுபிள்ளைத்தனமான பிரிப்பு முயற்சிகளையும், இந்த அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இராணுவ நடவடிக்கைகளையும், ஏமாற்றுத் தந்திரங்களையுமே நம்பியிருப்பார்களானால் இந்த நாடே இரண்டாகப் பிரிவதை இவர்களால் தடுக்க முடியாது போய்விடும்.


## கிழக்கில் ஐந்து தமிழ்க் கட்சிகள் கூட்டாக விடுத்த அறிக்கை

கடந்த ஒரு வார காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் நகரப் புறங்களிலும் புறநகரப் பகுதிகளிலும் திட்டமிட்ட விஷமிகளினால் விநியோகிக்கப்பட்ட, வடக்கு கிழக்கு முரண்பாட்டைத் தோற்றுவிக்கக்கூடியதும், தமிழ் மக்களை அந்நியப்படுத்தக்கூடியதுமான அநாமதேய துண்டுப் பிரசுரத்தினை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசமான வடக்கு கிழக்கு மாகாணத்தைப் பிரிப்பதற்கு, கடந்த பல ஆண்டுகளாக திட்டமிட்ட முறையில் சில புல்லுருவிகள் மறைமுகமாக எடுத்துவரும் முயற்சிகளை நாம் கண்டும் காணாதவர்கள் போல இருக்கமுடியாது. எனவே தமிழ் பேசும் மக்களாகிய நாம் ஒன்றிணைந்து இப்புல்லுருவிகளை அகற்ற கடமைப் பட்டுள்ளோம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்கு விடாப்பிடியாக நிற்கும் பேரினவாத சக்திகள், தமிழ் மக்களிடையே பிராந்திய வேறுபாட்டுணர்வுகளைத் தூண்டி குரோதத்தை வளர்க்க எடுக்கும் திரைமறைவு முயற்சிகளுக்கு எவரும் இரையாகி விடக்கூடாது.

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய கலாச்சாரம், பொருளாதாரம், பலம் ஆகியவற்றால் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கின்ற வடக்கு கிழக்கு மாகாணத்தைப் பிரிப்பதால் மேலும் எமது பொது எதிரிக்கு வலுவை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைந்துவிடும். ஆகவே, தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின், வடக்கு கிழக்கு இணைப்பு நிரந்தரமானதாக இருக்க வேண்டும்.



# மூன்றாவது திறவுகோல்காரர்களுக்கும் அந்தச் சாவிக் கொத்திலுள்ள ஏனைய திறப்புகளுக்கும்...

மற்றவர்களுக்கு அரசியல் பாடம் போதிக்கும் நிலையிலிருக்கும் உங்களுக்கு அரசியல் பற்றி நாம் விளங்கப்படுத்துவதற்கு ஒன்றுமில்லை. நிரம்பியிருக்கும் குப்பைக் கூடைக்குள் புதிதாக எதையும் போடமுடியாது.

திருவிளையாடல் நாகேஷ் போல கேள்விகளை மட்டும் கேட்டுக் கொண்டிருப்பதென்றால் எல்லோருக்கும் வாசியான சங்கதிதான். என்னசெய்ய? தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு கேள்விகளாலும் தீர்வுவந்துவிடப்போவதில்லை; பிழைகளை மட்டும் கண்டுபிடித்துச் சொல்லிவிட்டுப் பேசாமலிருப்பதாலும் தீர்வு வரப்போவதில்லை.

எதையுமே செய்யாமலிருப்பதுதான் தப்புச் செய்யாமலிருப்பதற்குச் சிறந்த வழி என்பது புரிகிறது. எல்லோருமே உங்களைப் போலிருந்துவிட வேண்டுமென்றா சொல்கிறீர்கள்?

தமிழ் மக்கள் சிங்களப் பேரினவாதிகளால் திட்டமிட்டு ஒடுக்கப்பட்டு வருகிறார்கள், சரி. ஆயுதப் போராட்டமும் சரியாக நடத்தப்படவில்லை, ஜனநாயக வழிமுறையிலான போராட்டமும் சரியாக நடத்தப்படவில்லை. எல்லாம் சரிதான். சரியாக நடத்தத் தெரிந்தவர்கள் என்னவானார்கள்? அவர்களுக்கு என்ன நடந்தது? இப்போது எங்கேயிருக்கிறார்கள் அவர்கள்? தெரிந்தவர்கள் யாரேனும் சொல்லி உதவுங்களேன்.

அவர்களது பிரச்சினையும் புரிகிறது. இதையெல்லாம் சரியாக நடத்த அவர்கள் முன்வருவதாக இருந்தால், முதலாவதாக புலிகள் விடுகிறார்களில்லை என்பதைச் சொல்ல வேண்டிவரும். புலிகளுக்கு எதிரான யுத்தத்தை நியாயப்படுத்த வேண்டிவரும். இதையெல்லாம் விரும்பாவிட்டாலோ ஈரோஸ் செய்ததைப் போல முகமூடியைக் கிழித்துவிட்டுப் புலிகளோடு ஐக்கியமாகிவிட வேண்டிவரும்.

உங்களுக்கேன் வம்பு? சும்மா எதையாவது எழுதிக் கொண்டிருங்கள் போதும். கிரமமாகப் பத்திரிகை கொண்டுவருவதுகூட அரசியல் சாதனைதான், செய்யுங்கள்.

## வெ.விநாயகமூர்த்தி

உங்கள் சிந்தனைக்கென்று நாமும் சிலவற்றைச் சொல்லிவைக்கலாம்:

1. தயவுசெய்து வரலாற்றைப் பிழையாகவோ திரிபுபடுத்தியோ எழுதுவதைச் செய்யாதீர்கள். வருஷங்களைப் பிரித்துக் காட்டும் வசதிக்காக, 1983 ஜூலைக் கலவரத்துக்குப் பிறகுதான் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் உருவாகின என்றெல்லாம் எழுதும் தவறைச் செய்யாதீர்கள். ஈழப்போராட்டத்தோடு சம்பந்தப்படாமலிருந்துகொண்டு கருத்துச் சொல்வதாக உங்கள் அரசியல் ஆலோச்னைகள் அமைந்துவிட வேண்டாம்.

2. பாராளுமன்ற வழிமுறைகளிலான போராட்டமோ ஆயுதமேந்திய போராட்டமோ, இதுவரை நடத்தப்பட்ட-நடத்தப்படும் முறைகள் எல்லாமே பிழையானவை என்று நீங்கள் கண்டுபிடித்திருக்கிறீர்கள். சரி, இவற்றையெல்லாம் சரியாக நடத்துவது எப்படியென்று நீங்கள் யாரேனும் எழுதுவதையோ, முடிந்தால் செய்து காட்டுவதையோ காண, எல்லா ஈழத் தமிழ் மக்களையும் போல நானும் ஆவலாயிருக்கிறேன். சரியாக நடத்துவதற்குரிய வழிமுறைகளையெல்லாம் உங்களுக்குள் மட்டும் ஒளித்து வைத்துக்கொள்ளாமல், வெளியே எடுத்து விடுவீர்களா?

இப்போதைக்கு வேண்டியது இதுதான்: நிறைவேறக்கூடிய தீர்வொன்று உருவாக என்ன செய்யப்பட வேண்டும்? அதைச் சாத்தியமாக்கக்கூடிய செயல் திட்டம் என்ன? தமிழ்க் கட்சிகள் கொண்டிருக்கும் முறைகள் எல்லாமே பிழையானவை என்றால், நீங்கள் வைத்திருக்கும் முறையைத் தெரிந்துகொண்டு, அதன்மூலம் இங்குள்ள பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கண்டுகொள்வது சாத்தியமானதென்றால், அதற்கு என்னாலியன்ற (ஜனநாயக முறையாயினும் சரி ஆயுத முறையாயினும் சரி, உங்களோடு நானும் ரெடி) சகல ஒத்துழைப்புகளையும் வழங்க விருப்பம் கொண்டிருக்கிறேன். சொல்கிறீர்களா?

3. என் நண்பர் ஒருத்தர் சொல்கிறார். உங்களிடமிருப்பது நம்பர் பூட்டென்றும், அதைத் திறப்பதற்கான நம்பர்களை நீங்கள் மறந்துவிட்டதாகவும், உங்களுக்கு நம்பர்கள் தெரியாமல் போனாலும் மற்றவர்களின் நம்பர்களெதுவும் அந்தப் பூட்டுக்குச் சரிவராதென்ற விடயம் மட்டும் உங்களுக்கு வடிவாய்த் தெரியுமென்றும் அவர் சொல்கிறார். நான் இதைப் பகிடியாகப் புறக்கணித்துவிடவே விரும்புகின்றேன். தமிழ் மக்களின் தேசிய இன அடையாளம் திட்டமிட்டவகையில் அழிக்கப்பட்டு வருவது குறித்தும், இதற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்றும் நீங்கள் நிஜமாகவே கவலைப்படுகிறீர்கள்என்றே நான் நம்புகிறேன்.


ஆனால், உங்கள் கருத்துக்களையோ இயக்கத்தையோ தடை செய்யாதவர்களையும், உங்கள் சிந்தனைத் திறனையும் செயலாற்றலையும் உபயோகித்து தமிழ் மக்களுக்கான தீர்வொன்றைக் காண்பதற்கு எந்தவகையிலும்தடையாக இல்லாதவர்களையும் ஏன் வயதாகி வாசலடிக்கு வந்துவிட்ட கிழவிகளைப் போல புறணி சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் என்றுதான் புரியவில்லை.

4. புலிகளைத் தவிர்ந்த தமிழ்க்கட்சிகள் இயக்கங்கள் எல்லாமே ஒன்றும் செய்ய வக்கில்லாமல் சும்மா இருக்கின்றன; அல்லது பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று பத்திரிகை அறிக்கைகள் மட்டும் விட்டுக்கொண்டிருக்கின்றன என்பது உங்கள் அபிப்பிராயம்.

ஆம்! பத்து வருடங்களுக்கு மேலாகிவிட்ட இந்தப் போராட்ட காலத்தில், இவர்கள் யாரும் எதையுமே செய்யவில்லைதான். எந்த மாற்றத்தையும்

...8 ம் பக்கம் ☞

# உளறு வாயன்



## உளறுவாயனின் தர்ம நியாயங்கள் யாருக்கு இங்கே புரியப் போகிறது?

*"எல்லாமே முன்பு சொல்லப்பட்ட விஷயங்கள்தான். ஆனால், யாரும் அதைக் கேட்காததனால் மீண்டும் பின்னாலே சென்று முதலிலிருந்து அதைச் சொல்ல வேண்டியிருக்கிறது"*

– ஆந்த்ரே ழீட்

என்னத்தைச் சொன்னாலும், ஒவ்வொண்டுக்கும் மற்றாக்கள் என்ன நினைக்கினமெண்டு தெரிஞ்சுகொள்ளாட்டில் எனக்கு மண்டை வெடிச்சுப் போகும். ஓம்! இது எல்லாருக்கும் உள்ளதுதான் எண்டாலும், கொஞ்சம் கனக்கக் கதைக்கிற ஆளெண்டபடியால் மற்றவையின்ரை ரியாக்‌ஷனிலை நான் வலு அவதானம்.

ஊதுற சங்கை ஊதிப்போட்டு விடியிற நேரம் விடியட்டுமெண்டிட்டு இருக்க என்னாலை ஏலாது. மற்றவை தூங்கிக் கொண்டிருக்கேக்கை பேசிக் கொண்டிருக்கிற வித்தையை எனக்குப் பௌதிகம் படிப்பிச்ச வாத்தியாரிட்டைக் கண்டு அந்தக் காலத்திலேயே அதிசயப்பட்டிருக்கிறன். எனக்கது ஏலாது.

பாரதிராஜா ஒருமுறை சொன்னவர், பாராட்டுகள் தாகத்துக்கு உப்புத் தண்ணி குடிக்கிற மாதிரியெண்டு. மற்றவை பாராட்டப் பாராட்ட இன்னுமின்னும் பாராட்டுக் கேக்க வேணுமெண்டு அது உற்சாகப்படுத்துமாம். பாராட்டுகினமோ திட்டுகினமோ என்னத்தைச் சொல்லுகினமெண்டு கேட்க ஆவலாதி உள்ளதுதான்.

கண்ணாடி பாக்கிற நேரமெல்லாம் உலக மகா விண்ணன் ஒருத்தனுக்கு முன்னாலை நிக்கிற மாதிரியான உணர்வுதான் எனக்கும். இதுவும் எல்லாரும் நினைச்சுக் கொள்ளுறதுதான் எண்டாலும் என்ரை வாய்விசேஷம் பாருங்கோ, உங்களுக்கு எரிச்சலை உண்டாக்கிக் கொண்டிருக்கிறன்.

என்னைப் பற்றி நான் நினைச்சுக் கொண்டிருக்கிறதுதான் சரியெண்டு எனக்குப்பட்டாலும், உலகத்தின்ரை அபிப்பிராயம் ஒட்டுமொத்தமாய் வேறைமாதிரிஇருக்குதெண்டால் அதை ஒத்துக்கொள்ளத்தானே வேணும்.

சரி, போன முறை நான் எழுதினதுக்கு எனக்குக் கிடைச்ச அபிப்பிராயங்களைக் கேட்டியளெண்டால், என்ரை புலம்பலின் தாற்பரியம் உங்களுக்கு விளங்கும். எங்கடைஆக்கள் வலுமோசம் கண்டியளோ! முட்டைக்குள்ளை இருக்கிறதை விட்டிட்டுக் கோதோடைதான் கூட மினக்கெடுவினம். இந்தக் கூத்துக்கு இப்ப நடந்துகொண்டிருக்கிற கன பகிடியளைச் சொல்லலாம் எண்டாலும், எக்கச்சக்கமாய் இது நீண்டு போகும். பிறகு எழுதினதெல்லாத்தையும் ஒரேயடியாய்ப் பாதியாய்க் குறைச்சுப் போட்டுத் தாரும் எண்டு நிப்பினம், வேண்டாம்.

விசயத்துக்கு வாறன். என்னட்டைக் கதைச்ச ஆக்கள் ரண்டு விதமான அபிப்பிராயங்களைத்தான் சொல்லிச்சினம். ஒண்டு, எங்கை உம்மடை ஆயுதத்தைக் காணேல்லை எண்டது (அதுதான் அந்த வாள் படம்). ஆளை விட்டிட்டு வாளைத் தூக்கிப் பிடிக்கிற எங்கடை ஆக்களை என்ன சொல்ல? ஆசிரியர் குழுவைக் கேட்டால், 'உம்மை அரைப் பக்கத்துக்கு எழுத விட்டால், பிரேக் இல்லாமல் பக்கம் முழுக்க விளாசித் தள்ளுறீர்... அதுக்குள்ளை உம்மடை வாள் மூஞ்சையை எங்கை போட?' எண்டு கேக்கினம்.


பரிணாமத் தத்துவப்படி வாளோடு தோன்றின முதல் குரங்கு தமிழ்க் குரங்கு எண்டு ஆராவது சொன்னால்தான் நம்மளவனுக்குத் திருப்தியெண்டு புதுமைப்பித்தன் சொன்னதையும் சேர்த்துப் பார்த்தால், எங்கடை ஆக்களுக்குள்ளை வாழாசையைவிட வாளாசை ஏன் பவர்ஃபுல்லாயிருக்கு எண்டதும் விளங்குது. ஆக்கள் முக்கியமில்லாமல் ஆயுதங்கள் முக்கியமாய்ப் போனதாலை வந்த வினை இது.

எதுக்கும் படம் போடுறதெண்டால் வாள் துவக்கு எண்டு வன்முறை ஆயுதங்களை விட்டிட்டு, நாகரீகமடைஞ்ச மனுசரை வாழும்படியாய்ச் செய்யக் கூடிய ஆயுதம் எதையாவது போடுங்கோ எண்டு கேட்டிருக்கிறன்.

அடுத்த விசயம், 'சங்கரப்பிள்ளையரும் நீர்தானோ?' எண்ட கேள்வி. இந்தக் கேள்வியை எழுத்து மூலம் ஆராவது கேட்டிருந்தால் சங்கரப்பிள்ளையர் கோட்டிலை கேஸ் போட்டாலும் போடுவார். அவர் சொன்ன அந்த ரண்டு விசயத்தையும் அப்பிடிச் சின்னப் பெட்டிக்குள்ளை சொல்லேலுமெண்டால், எனக்கு ஏனிந்தக் கெட்ட பேர் வருது?

என்னை மாதிரி, ஒரு விசயத்தைச் சொல்ல அங்கை சுத்தி இங்கை சுத்தி வாற ஆளில்லை அவர். ரண்டொரு வார்த்தையிலை ஆக்களுக்குப் பிடரித் தட்டுப் போட்டுவிடுகிற 'ரைப்' அவர். பலதும் பத்தும் தெரிஞ்ச, ஆனால் அமுத்தலான ஆசாமி. வெட்டொண்டு துண்டு ரெண்டாய் நீதி நியாயத்தைப் புட்டுவைக்கிறதிலை விண்ணன்.

'ஜனநாயக நீரோட்டத்திலை குதிச்ச பொடியளுக்கு இஞ்சை ஏன் இப்பவும் வில்லங்கமாய்க் கிடக்கு சொல்லும் பாப்பம்...' எண்டு திடீரெண்டு கேட்பார். இந்தமாதிரி விசயங்களுக்கு உடனை திறந்து கொள்ளக்கூடிய மெக்கானிசம் எதையும் என்ரை மூளை கொண்டிருக்காதபடியால் திருதிருவெண்டு முழித்துக் கொண்டு நிற்பேன்.



'இந்த நாட்டிலை ஜனநாயக நீரோட்டம் எங்கை இருக்குதப்பா? அந்த நீரோட்டமெல்லாம்வத்தி நிலம் காய்ஞ்சு போயெல்லோ கிடக்கு. அதிலை குதிக்கிறவைக்குக் கால்கை முறியாமல் என்ன செய்யும்?' எண்டொரு பயங்கரக் கடிகடிப்பார். 'மக்களுக்கு ஜனநாயகச் சூழ்நிலையைக் குடுக்கோணுமெண்டால், முன்முயற்சி எடுக்கிற சிலர் இப்பிடிக் கால்கை முறிவைப் பாக்காமல் குதிச்சால்தான் ஏலும்' எண்டு பிறகு தனக்குத் தானே சொல்லுற மாதிரிச் சொல்லிக் கொள்ளுவார்.

'இஞ்ச பாரும் உ.வா. உமக்கு மிருக சாத்திரம் தெரியுமோ?' எண்டு கேட்பார். நான் மறுபடியும் 'திருதிரு' 'யானையளைப் பாத்திருக்கிறீரோ, அவை கூட்டங்கூட்டமாய்த்தான் வாழும் காணும். சிங்கமும் கூட்டமாய்த்தான் வாழும். ஏன், மான் மரை கரடி காண்டாமிருகமெல்லாம்கூட கூட்டமாய்த்தான் வாழும். ஆனால், புலி தனியாய்த்தான் வாழும் ஐசே' எண்டொரு நமுட்டுச் சிரிப்படிப்பார். இந்த மிருக சூச்சுமத்தை நான் வாயைப் பிளந்து கேட்டுக் கொண்டிருப்பேன்.

இடைக்கிடை எனக்கும் விடுவார் நக்கல். உலகத்திலை ஒவ்வொருத்தரும் தனக்கு வடிவாய்த் தெரிஞ்ச விசயங்களைப் பற்றி மட்டும்தான் கதைக்க வேணுமெண்டிருந்தால், கனபேருக்கு வாயைத் திறக்கிற வேலை அவ்வளவாயிருக்காது ஐசே...! என்பார். சுத்தி வளைச்சு எங்கைவாறாரெண்டு எனக்கு விளங்கும். வயதுக்கு மூத்த ஆளோடை எதுக்கு வம்பு தும்பெண்டிட்டு விளங்காத மாதிரி விட்டிடுறது.



போனமுறை இந்தப் பக்கத்தை வாசிச்சுப் போட்டுச் சொன்னார், 'என்னோடை பழகத்தொடங்கின பிறகு, இப்பெல்லாம் நீர் கொஞ்சம் புத்திசாலித்தனமாய்க் கதைக்கிற மாதிரித் தெரியுது. நல்ல சகவாசத்தைத் தேடு நல்ல சகவாசத்தைத் தேடு எண்டு பெரியவை படிச்சுப் படிச்சுச் சொல்லியிருக்கிறது உம்மைப் பொறுத்தவரை சரியாய் நடந்திருக்கிற மாதிரித்தான் தெரியுது' எண்டொரு போடு போட்டார்.

இப்பிடிச் சங்கரப்பிள்ளையரின் மூளை வேறை, என்ரை வாய் வேறை. அவர் ஆழத்தை உள்ளடக்கி அமைதியாகப் பாய்கிற நதி என்றால், நான் ஆர்ப்பரித்துக் கொட்டுகிற அருவி. எப்பிடி என்ரை கலைஞர் பாணி வசனம்? ம்... தி.மு.க. நிலைமை இப்பிடியாய்ப் போச்சே! அரசியல்வாதிக்குப் பிள்ளைப் பாசம் குடும்ப பாசம் எல்லாம் பொல்லாததுதான்.

அதைவிடுங்கோ. என்ன எங்கடை டிங்கிரி பண்டா ஒரு அறு..ம் விளங்காத ஆளாய்க் கிடக்கு. பாஸ்கரலிங்கமும் சண்முகலிங்கமும் உயர் பதவியிலை இருக்கினமாம், கொழும்பிலை தமிழர் நல்லாய்த்தானே இருக்கினமாம், பிறகென்ன தமிழருக்குப் பிரச்சினை எண்டு கேக்கிறார். அசல் கண்டி விவசாயி மாதிரிதான் கதைக்குது அந்தாள். என்னத்தைச் செய்ய?

இதுக்கொரு அரசியல் தீர்வு வேணுமெண்டதைச் சொன்னால், எங்கடை சிலருக்கே அது அவ்வளவு உவப்பாயில்லை. புலிகளைப் பாசிஸ்ட்டுக்கள் எண்டும் சொல்லுறாய். யுத்தம் கூடாதெண்டும் சொல்லுறாய். முரண்பாடாயெல்லோ கிடக்கு எண்ணுகினம்.

என்னட்டை ஒரு முரண்பாடுமில்லை. தமிழ் மக்களுக்கு ஏற்றுக்கொள்ளத் தக்கதான தீர்வு ஒண்டை வைச்சுப் போட்டு, புலிகள் அதை எதிர்த்தினமெண்டால், பிறகு நடக்கிற யுத்தம்தான் நியாயமாயிருக்கும். இப்ப நடக்கிற சண்டை பிழைதான். என்னமோ எனக்குத் தெரிஞ்சதைச் சொன்னன். ஏற்கிறதும் விடுறதும் அவையவை எங்கெங்கை நிக்கினமெண்டதைப் பொறுத்தது.

சந்திரா ரணதுங்க எண்டொரு அமைச்சர் சிறில் மத்தியூவுக்குப் பிறகு தமிழ் மக்களிலை கொஞ்சம் விசேச கவனம் கொண்டிருக்கிற மந்திரி மாதிரித் தெரியுது. இந்த நாட்டிலுள்ள இனப்பிரச்சினையைப் பற்றி இவரும் நல்ல வடிவாய்த் தெரிஞ்சு வைச்சிருக்கிறார். ராசாவுக்கேற்ற மந்திரி. தாய்ப் புலி... வேண்டாம் அந்தப் பழமொழி வேண்டாம். தலைவர், இஞ்சை பார், ஓநாயும் ஆடும் எவ்வளவு ஒற்றுமையாய்ச் சந்தோசமாய் இருக்குதுகள் எண்டால், இவர், அங்கை பாருங்கோ ஆடெல்லோ ஓநாயைக் கடிக்குதெண்டு நிக்கிறார்.

தமிழரெல்லாம் எந்தச் சிங்கள ஊரிலையும் போய்ச் சீவிக்கலாமாம். சிங்களவர் யாழ்ப்பாணத்துக்குப் போய் இருக்கலாமோ எண்டு குழந்தைப் பிள்ளையளுக்கு அம்புலிமாமாக் காட்டுற மாதிரிக் கேள்வியொண்டைக் கேக்கிறார். தேச வழமைச் சட்டத்தையெல்லாம் சொல்லிப் போட்டுச் சொல்லுறார், இந்த நாட்டிலை சிங்களவரை விடத் தமிழரே கூடுதல் உரிமையளோடை வாழுகினமாம். அப்பிடியெண்டால் சரி, எங்களுக்கெதுக்கு மற்றவையின்ரை உரிமையளைப் பறிக்கிற வேலை. இவை தங்களுக்கு உரிமையள் காணாதெண்டு போராட்டம் நடத்திச்சினமெண்டால், நாட்டைப் பிரிச்சுக் குடுத்து விடலாமெண்டுதான் நான் நினைக்கிறன், என்ன சொல்லுறியள்?

கிழக்கிலை சிங்கள மக்களைக் குடியேற்றினதாலை, அங்கை சிங்களவரின் எண்ணிக்கை வீதந்தான் கூடினதே தவிர, தமிழர்களின் எண்ணிக்கை குறையேல்லை. அப்பிடியிருக்க, இந்தத் தமிழ் அரசியல்வாதியள் ஏன் சிங்களக் குடியேற்றம் பற்றிக் குறைகூற வேணும் எண்டும் கேக்கிறார் அவர். சந்திரா ரணதுங்க, இந்த நாட்டை ஆளுற அரசாங்கத்திலை ஒரு முக்கிய மந்திரி. அவற்றை அறிவைப் பற்றி என்னைப் போலச் சாமானியன் சந்தேகப் படுறது அவ்வளவு சரியில்லைத்தான். ஒண்டைப் பெரிசாக்கினால் மற்றது சின்னனாய்ப் போகும் எண்ட இருகோடுகள் தத்துவம் கூட அவருக்கு விளங்கேல்லை. என்ன செய்யச் சொல்லுறியள்? தமிழ் விளங்குமெண்டால் பேசாமல் பாலச்சந்தர் படத்தையாவது போட்டுப் பாக்கச் சொல்லலாம்.



நீலக் கட்சிக்குள்ளை இனப்பிரச்சினை சம்பந்தமாய் ஏதோ மாற்றம் தெரியிற மாதிரிப் படுது. பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் அரசியல் தீர்வொண்டை முன்வைக்க வேணும்எண்டு சுதந்திரக் கட்சி எம்.பி. அநுருத்த ரத்வத்தை பேசியிருக்கிறார். இவர் ரத்வத்தை குடும்ப அம்மையாருக்கு நெருங்கிய ஆளெண்டு கேள்வி. அப்பிடியெண்டால் அங்கை ஏதோ மாற்றம் ஏற்பட்டிருக்கெண்டுதான் தெரியுது. தீர்வுத் திட்டமொண்டைத் தயாரிக்க தமிழ்க் கட்சிகளையெல்லாம் அணுகுகினமெண்டும் இடையாலை செய்தி. எலக்சன் கிட்ட வந்திட்டுது. இனி தமிழ் வோட்டுகளுக்கும் ஓடியிடிக்கத்தானே செய்வினம். என்னத்துக்காயெண்டாலும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கோணுமெண்டு முன்னுக்கு வந்திச்சினமெண்டால் நல்லதுதான்.

ம்... நீண்டுதான் போச்சு. பொறுங்கோ, கடைசியாய் இதையும் சொல்லிப் போட்டு நிப்பாட்டுறன். இந்த ரஷ்யா போன போக்கைப் பாத்தியளே. ஜனநாயகத்தைக் கொண்டுவர வெளிக்கிட்ட ஆக்கள், அமெரிக்கா சப்போட்டிலை பாராளுமன்றத்தையெல்லே உடைச்சிருக்கினம். இதுக்கு முந்திப் பாராளுமன்றக் கட்டிடத்தை

...8 ம் பக்கம் ☞

முந்தநாள் நோர்வேயில்
மூட்டை முடிச்சோடு புறப்பட்டபோது
கல்லாக நீருறைந்து காலை இடறுகின்ற
பொல்லாக் குளிரங்கே....
வெள்ளை விரித்து வெண்பனி தெருநீள....
ஈழத்தைப்போல இலையுதிர்த்த மரங்களெல்லாம்
சாலை நெடுக....
காற்றோடு சற்றுக் கலங்கி அவை அழுவதுபோல்
ஒரு தோற்றம் மனக்கண்ணில்
தேசத்தை நான் நினைத்தேன்.

தமிழ் பேசும் மக்களது தாய்மண்ணாய்
வடகிழக்காய்
நீண்டு கிடக்கின்ற ஈழத்தை நான் நினைத்தேன்.
கோவில் மணியோசை
சேச்சுகளில் துதிப்பாடல்
பள்ளிவாசல்களின் பாங்கோசை.
மெல்ல எம்மை
தொட்டுத் துயிலெழுப்பும் மரபுள்ள எம்முடைய
தேசத்தை நான் நினைத்தேன்
மனமுடையும்.

சேட்டு நாலுமுழம் தோளில் ஒரு சீலைப்பை
செருப்பு
தடவ ஒரு குறுந்தாடி
யாழ்ப்பாணத் தெருக்களிலே நண்பருடன் நானன்று
கேட்பாரில்லாமல் சுதந்திரமாய் உலவி வந்த
நாட்கள் நினைவு வந்து நெஞ்சை துயரடைக்கும்....

அன்று
நேரடி மோதலில்லை
குண்டு பொழிகின்ற விமானமில்லை
தெருக்களிலும் மின்சாரக் கம்பியிலும் சாவில்லை.
அப்படியோர் காலத்தில் அரசொடுக்குமுறைக்கெதிராய்
சத்தியாவேசத்தை வளர்த்து
விடுதலைப் பயிர் வளர்க்க நம் மண்ணை உழுத அந்த
நண்பர்களோடு நான் வளர்த்த விவாதங்கள்
எல்லாம் நினைவு வரும்.
இன்று அவருட் சிலரில்லை
சிலரின்று நாட்டிலில்லை
நாட்டிலுள்ள சிலரோடு நமக்கின்று தொடர்பில்லை.

தொலைந்துபோன ஒரு கோல்ப் பந்துபோலெங்கோ
துருவத்தில் வந்து விழுந்து கிடக்கின்றேன்.
முட்டையும் போட இயலாத ஒரு லெக்கோன் கோழியைப்போல்
பெரிய இடத்து அல்சேசன் நாயைப்போல்
வயிறாரத் தின்று
வாழாது இருக்கின்றேன்.

என் நாட்டின் விடுதலையை
எம்மக்கள் சுதந்திரத்தை
பேச்சு எழுத்து கருத்துச் சுதந்திரத்தை
மீட்டெடுக்கும் நாளை கனாக்கண்டு பாடுகின்றேன்.

நானும் ஜபாரும் சித்திக்கும் சுதந்திரமாய் கைகோர்த்து
மீண்டும் யாழில் தெரு நடக்கும் நாள்வரைக்கும்
நிச்சயம் என் கண்கள் நீர் வடிக்கும்
என் கவிதை கோபமுறும்....

*– வ.ஐ.ச.ஜெயபாலன்*
*பாரிஸ் இலக்கியச் சந்திப்பில் வாசித்த கவிதையிலிருந்து...*

## உளறு வாயன்



7ம் பக்கத் தொடர்ச்சி

உடைச்ச பெருமை ஹிட்லருக்குத்தான் இருந்ததெண்டு வரலாறு தெரிஞ்ச ஆக்கள் சொல்லுகினம்.

செஞ்சதுக்கத்திலை லெனின் சமாதிக்கு மரியாதைக்காவல் செய்த அந்தச் செஞ்சேனை வீரர்களையும் யெல்ட்சின் நிப்பாட்டிப் போட்டார். பழைய கம்யூனிச ஆட்சியைச் சொன்ன கடைசிக் கண்ணியையும் எடுத்தாச்சு. அதுசரி, கம்யூனிஸ்ட் ஆட்சியிலைதான் அதைத் தடை செய்கிறார்கள் இதைத் தடை செய்கிறார்கள் எண்டு எல்லாரும் சத்தம் போட்டினம். இப்ப, அமெரிக்க ஜனநாயகத்தைக் கொண்டுவர வெளிக்கிட்டவையும் கட்சியளுக்குத் தடை, பத்திரிகையளுக்குத் தடை எண்டு எல்லாத் தடையும்தானே செய்யினம். அதென்னது, அவை செய்தால் சர்வாதிகாரம், இவை செய்தால் ஜனநாயகமே? இஞ்சை தாங்கள் செய்தால் ராஜதந்திரம், மற்றவை செய்தால் துரோகம் எண்டு புலியள் சொல்லுற மாதிரியெல்லோ கிடக்கு.

இப்ப கடைசியாய் என்ன கூத்து நடந்திருக்கெண்டால், ரஷ்யாவில போய்ப் பேசின அமெரிக்க வெளிநாட்டு மந்திரி, பிற்போக்கு சக்திகளை எல்லாம் அடக்கத்தான் வேணும், ஆனால் கட்சிகளை பத்திரிகைகளைத் தடை செய்யாமல் அதைச் செய்ய வேணுமெண்டு அட்வைஸ் பண்ணியிருக்கிறார். இந்த ஆகடியத்தை என்ன சொல்ல? பாலையாவைப் போலச் சொல்லுறதெண்டால், என்னடா இது ரஷ்யாவுக்கு வந்த சோதனை! சச்சச்சச்சே அவமானம் அவமானம்...

# ஏன் இந்த நிலைமை?

...முன்பக்கத் தொடர்ச்சி

குடாநாட்டில் பாடசாலைகள் ஒழுங்காக இயங்க முடிவதில்லை. வானத்தில் விமானத்தைக் கண்டாலே மாணவர்களை வீட்டுக்கனுப்பிவிட்டுப் பாடசாலைகளை மூடிவிடும் நிலைமையே உள்ளது. வீட்டிலும் மாணவர்கள் குப்பி விளக்கு வெளிச்சத்தில் படிக்கக்கூட முடியாதளவுக்கு எண்ணெயைச் சிக்கனமாகப்பயன்படுத்தவேண்டிய நிலைமை.

துவக்குகளையும் குண்டுகளையும் தவிர எல்லாப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு. எண்ணெய் இல்லை, பற்றரிகள் இல்லை, பாதுகாப்பு உணர்வும் இல்லாமல் எப்படி நிம்மதியாகப் படிக்க முடியும்?

போக்குவரத்துக்கும் இனிக் குதிரை ரதங்கள் வரவேண்டியதுதான் பாக்கி. கோப்பாயிலிருக்கும் ஆசிரியர் ஒருவர் பருத்தித்துறையிலிருக்கும் பாடசாலைக்குப் போய்க் கல்வி கற்பிப்பதானால், இன்றைய போக்குவரத்துச் சூழ்நிலையில் அவரது அக்கறை எங்ஙனமிருக்கும்?

இத்தகைய சூழ்நிலையில்தான் குடாநாட்டு மாணவர்கள் போட்டிப் பரீட்சைகளில் போட்டியிட வேண்டியிருக்கிறது. சித்தியடைந்த குறைந்தளவு மாணவர்களும் கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்களையே தங்கள் விருப்பத் தேர்வாகப் போடுகிறார்கள்.

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு தேவையான அளவு மாணவர்களைப் பெற, பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளியில் மாற்றம் கொண்டுவரும்படி கோரும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இரண்டாண்டுகளுக்கு முன், யாழ்ப்பாணத்தைவிட்டு முஸ்லிம் மக்கள் விரட்டியடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, முஸ்லிம் மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழகம் செல்ல முடியாத நிலையினால் மாணவர் தொகை குறைந்தது. பின்னர் ஏனைய மாவட்ட தமிழ் மாணவர்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி கோருவதை வெகுவாகக் குறைத்துக் கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் தங்க நேரும் மாணவர்களும் புத்திஜீவிகளும் புலிகளின் ஆயுத நிர்ப்பந்தங்களுக்கு அடிபணிய வேண்டியிருப்பதாலும், யுத்தக் கொடூரங்களுக்கு உட்படவேண்டிய நெருக்குதலினாலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை விருப்பத் தேர்வு செய்வதைத் தவிர்த்து விடுகின்றனர்.

சுதந்திரமாகக் கல்வி கற்க முடியாத சூழ்நிலையைப் புலிகளும் அரசாங்கமுமாக யாழ்ப்பாணத்தில் உருவாக்கி வைத்திருப்பதன்மூலம், தமிழ் மாணவர்களின் கல்வித்தர நிலைமையைச் சீரழித்திருப்பதுடன், அறிவார்ந்த ஒரு சமூகத்தின் எதிர்காலம்பற்றி அச்சப்பட வேண்டிய நிலைமையையும் ஏற்படுத்தியுள்ளனர்.



6 ம் பக்கத் தொடர்ச்சி...

ஏற்படுத்தவில்லைதான். கனடாவிலோ, நோர்வேயிலோ, அல்லது பத்திரிகை அலுவலகங்களுக்குள்ளோ இருந்து கொண்டு, எந்தவித இழப்புகளுமில்லாமல், எந்தத் தியாகமும் செய்யாமல், பாதுகாப்பாய், போராட்டத்தினால் கிடைக்கும் இன்பங்களை அனுபவித்தபடி வாழ்ந்து வருகிறார்கள். இதுதானே நீங்கள் சொல்ல வருவது?

தமிழ் மக்களுக்காகச் சதா சிந்தித்து எழுதியபடி இருக்கும் நீங்கள், சரியான அரசியல், சரியான வழிமுறை எல்லாவற்றையும் தெரிந்துவைத்துக்கொண்டு, அதையெல்லாம் வெளிப்படுத்தாமலிருந்தால் எப்படி? தமிழ்ப் பரியாரிமார் மாதிரி அதையெல்லாம் உங்கள் பரம்பரைக்கான ரகசியங்களாக விட்டுச் செல்லப் போகிறீர்களா?

5. நடத்தப்பட்டுவரும் எல்லா வழிமுறைகளுமே பிழையானவை என்று வெறுமனே சொல்லிக் கொண்டிருப்பது, 'பேசுறவன் எழுதுறவன் எல்லாரையும் தூக்கி பங்கருக்குள் போடு' என்னும் தமிழ் ஆயுத அதிகாரத்துக்கு வழிவெட்டிக் கொடுப்பதாய்த்தானே அர்த்தம்.

நீங்கள் அதைத்தான் செய்துகொண்டிருக்கிறீர்கள் என்றும், சும்மா தமிழ் மக்கள் நலனில் அக்கறை போல எழுதிக்கொண்டிருப்பதெல்லாம், உங்கள் கையாலாகாத்தனத்தை மறைத்து ஈகோவைத் திருப்தி செய்துகொள்ளத்தான் என்றும் என் நண்பர் கூறுவதை மறுக்க முடியாமலிருக்கிறதே!

உடனே கோவிச்சுக் கொண்டு மறுப்பெழுதக் குந்தி விடாதீர்கள். அதுவல்ல முக்கியம். இப்போதைய நிலைமையில் இந்தப் பிரச்சினைக்கு எந்தவிதமான தீர்வு சாத்தியம் என்று சிந்தியுங்கள். அதைக் கொண்டுவருவதற்குச் சரியான வழிமுறை என்ன, அதைச் சரியாக நடத்த என்ன செய்யவேண்டும் என்பதையெல்லாம் யோசியுங்கள். யாழ்ப்பாணத்தில், மக்களைத் திரட்டி ஜனநாயக வழியிலான போராட்டம் ஒன்றை நடத்தத் தீர்மானித்தால், எப்போது உங்களுக்கும் அங்கு வர வசதிப்படும் என்று எழுதுங்கள்.

''பிழை கண்டுபிடித்துப் பேர் வாங்கும் புலவர்களாக', நடந்து முடிந்தவைகளிலுள்ள பிழைகளை மட்டுமே சொல்லிச் சொல்லி தமிழ் மக்களுக்கு சேவை செய்ய எண்ணாதீர்கள். முடிந்தவரை செயற்படுத்துவதையும் கணக்கிலெடுத்துக்கொண்டு சிந்தியுங்கள்.

வேறென்ன உங்களிடம் நான் எதிர்பார்க்க முடியும்? தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்க என்னென்ன செய்திருக்க வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் தெளிவாக வரையறுத்து வைத்துக் கொண்டுதான்- அதற்கான திட்டங்களையும் வைத்துக் கொண்டுதான் எழுதிக் கொண்டிருக்கிறீர்கள் என்றால்.... அட, அந்த நாசமறுப்பையாவது சொல்லித் தொலையுங்களேன்.

ஒவ்வொன்றிலிருந்து விலகிப் பின்வாங்கியிருந்தாலும் கூட ஒரு போர்வீரன் உயிரோடு இருக்கும்வரை அவன் தோற்றுவிட்டதாகச் சொல்லமுடியாது; கூடாது. மேலும், முன்னேறுவதும் பின்வாங்குவதும் பதுங்குதலும் சரணடைவதும்கூடப் போராட்டத்தின் ஒரு பகுதியேயாகும். நான் சார்ந்துள்ள, மறுபடியும் எவர் விரும்பியபோதிலும் மீட்டுக் கொள்ள முடியாத அளவுக்கு என்னை ஈர்த்துள்ள, என் காலத்திய சமூக-அரசியல்-பொருளாதார சித்தாந்த உறுதிப்பாட்டினை எப்போதும்போல் நான் இழக்காமல் இருக்கும்வரை எனது போராட்டம் ஓய்ந்துவிடுவதும் இல்லை; தோற்றுவிடுவதும் இல்லை.

–ஜெயகாந்தன்

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

இப்பத்திரிகை, 32, மார்கஸ் பெர்னாண்டோ மாவத்த, கொழும்பு-7 ஐச் சேர்ந்த க.பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.